# தீர்க்கதரிசி வில்லியம் பிரான்ஹாம் ஊழியத்தில் அவரிடத்தில் கேட்கப்பட்ட கேள்விகள்

## *COD - 1 - TO - COD - 23*

## *1953 - TO - 1964*

வில்லியம் மரியன் பிரான்ஹாம்

# தீர்க்கதரிசி வில்லியம் பிரான்ஹாம் ஊழியத்தில் அவரிடத்தில் கேட்கப்பட்ட கேள்விகள்


**THE LAST VOICE MINISTRY**

**17, Vivekanatha Nagar, Kumarapillai Street,**
**Kottucherry, Karaikal – 609609.**
**Cell: +91 9940808951**
**Website: www.thetabletamil.in**
**www.thelastvoicemessage.com**
**E-Mail: thelastvoiceministry@gmail.com**

# தீர்க்கதரிசி வில்லியம் பிரான்ஹாம் ஊழியத்தில் அவரிடத்தில் கேட்கப்பட்ட கேள்விகள்

# *COD - 1 - TO - COD - 23 - 1953 - TO - 1964*

# *53-07-29 COD #1*

***1. தேவன் மனுஷனை, "ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார் ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார்"*** *இப்பொழுது இதுதான் முதல் குறிப்பு (point) என்று நான் நினைக்கிறேன்.* ***இப்பொழுது ஆதியாகமம் 2:7 "அவர் உருவாக்கினார்"*** *(கீழ் கோடிடப் பட்டுள்ளது)* ***என்று கூறுகிறது. "ஆனால் முதலாவதாக அவர் சிருஷ்டித்தார்" பிறகு இதை கோடிட்டுள்ளார். "அவர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கினார்*** *(கோடிடப்பட்டுள்ளது)* ***ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார்." இன்னுமாக. இப்பொழுது இதிலுள்ள வித்தியாசம் என்ன, அல்லது மேலே உள்ள வேதவாக்கியத்தின் இணைப்பு எங்கே இருக்கிறது?***

***2. தேவன் ஏவாளை ஆதாமின் எலும்பிலிருந்து உருவாக்கினார், ஆதியாகமம் 2:18-21. தேவன் ஆணையும் பெண்ணையும் சிருஷ்டித்து, பிறகு ஆதாமையும் ஏவாளையும் உருவாக்கினாரா?***

***3. காயீன் பெண்கொள்ள அப்பொழுது சிருஷ்டிக்கப்பட்ட ஆண், பெண்ணிடத்திற்குச் சென்றானா?***

***4. ஞாயிறு வாரத்தின் முதல் நாள், சனிக்கிழமை ஏழாவதுநாள் இதை நீர் விளக்கமுடியுமா? வாரத்தின் முதல் நாளான ஞாயிற்றுகிழமையில் கிறிஸ்தவர்கள்***

*சபைக்குச்செல்கின்றனர். வாரத்தின் ஏழாம் நாளான சனிக்கிழமையில் அவர்கள் செல்ல வேண்டுமல்லவா?*

*5. புறஜாதிகளின் யுகம் முடிவுற்ற பின்னர் யூதர்கள் இரட்சிக்கப்பட வாய்ப்பு இருக்குமா?*

*6. நீர் விசுவாசிக்கிறீரா – யூதர்களுடைய - பாலஸ்தினாவிற்கு யூதர்களுடைய திரும்ப வருதலானது, வேதாகம தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலா? நீர் பாலஸ்தீனாவிற்குப் போகவிருப்பதாக நாங்கள் கேள்விப்பட்டோம், அது உண்மையா?*

*7. மத்தேயு 24:29 "சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும்" இது எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன்பு அல்லது பின்பு நிகழுமா, அல்லது இயேசு பூமியின் மீது ஆளுகை செய்ய வரும் முன்னர் நிகழுமா?*

✻✻✻

# *54-01-03M COD #2*

*8. பதின்மூன்று வயதில் நான் ஞானஸ்நானம் பண்ணப்பட்டேன். மறுபடியும் நான் எடுக்க வேண்டுமா?*

*9. சுவிசேஷமானது யூதர்களுக்குதிரும்புகையில் சபை எந்த நிலையில் இருக்கும்?*

*10. அந்த நாட்களில் இருந்த அந்த இராட்சதர்கள் யார்?*

*11. "தேவ குமாரர்" என்றால், அவர்கள் தூதர்களா அல்லது பரலோகத்திலிருந்து வந்த ஆவிகளா?*

*12. சகோதரன் பிரான்ஹாம், "இந்த மனிதன் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறார், ஏனென்றால் 'இதை' செய்தார்" அல்லது "இந்த ஸ்திரீ பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிறார், ஏனெனில் 'அதை' செய்தான்" என்று அறிந்து கூற நான் விரும்புகிறேன்.*

*13. வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிடப் பட்டுள்ள, மீதியான யூதர்களில் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர், சபை எடுக்கப்படுதலில் பங்கு கொள்வார்களா? துவக்கத்தில் இஸ்ரவேல்... அவர்கள் துவங்கி. .. (என்னை மன்னிக்கவும்) . . . காலத்திலே செல்கின்ற.*

*14. "பட்டயத்தின் முடிவு" என்னும் ஏசாயாவின் கருத்து கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சியில் நிகழப்போகும் செழிப்பை குறிக்கின்றதா, அல்லது வேறு விதமாக மனிதனால் கொண்டுவரப்படும் ஒன்றா (அநேக நவீன மதங்கள் நமக்கு கூறுவது போன்று)!*

***

# *54-01-03E COD #3*

*15. இப்பொழுது. மனிதன் மரித்தவுடன் பரலோகத்திற்கு அல்லது - அல்லது நரகத்திற்கு செல்வானா அல்லது நியாயத்தீர்ப்பிற்காக அவர்கள் காத்திருப்பார்களா?*

*16. தயவு செய்து யாத்திராகமம் 24வது - 4வது அதிகாரம் 24வது வசனத்தை விளக்குங்கள். தேவன் மோசேயை அல்லது அவனுடைய குமாரனை கொல்ல முனைந்தார், ஏன்?- இந்த வேத வசனத்தின் அர்த்தம் என்ன?*

*17. தயவு கூர்ந்து வேத வசனத்தின் அர்த்தங்களையும், அது எப்பொழுது நிறைவேறும் என்று விளக்குங்கள்: ஏசாயா 4 மற்றும் 1. நன்றி*

*18. நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து, நாம் ஆராதனைக்காக கர்த்தருடைய வீட்டிற்குள் எவ்விதமாக வரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். என்பதை எங்களுக்கு தயவு கூர்ந்து கூறுவீரா?*

*19. கேள்வி: என் சபையில் நான் இராப்போஜனம் எடுக்கவிருந்த நேரத்தில் ஏன் தேவனுடைய தரிசனமானது என் முன் வரவேண்டும்? அதில் (நல்லது, இது ஒரு பெண்ணின் பெயராகும்; ஆம், இது பெண்ணின்பெயராகும்,) என் சபையில் நான் இராப்போஜனம் எடுக்கவிருந்த நேரத்தில் ஏன் தேவனுடைய தரிசனமானது என் முன் வரவேண்டும்?*

*20. பின் வருகின்ற இது - இது எனக்குத் தெரியும்: 1 தீமோத்தேயு, 2வது - II தீமோத்தேயு 2வது அதிகாரம் 16 வது வசனம்.*

*21. இயேசு தம்முடைய - இயேசு தம்முடைய ஞானஸ்நானத்திலிருந்து தம்முடைய மூன்று வருட ஊழியத்தின் வரை எங்கேயிருந்தார்?*

*22. ஒரு காலத்தில் - ஒரு காலத்தில் நாமெல்லாரும் வெள்ளையாகவோ அல்லது கறுப்பாகவோ இருந்தோமா? அந்த இரண்டில் எதற்கு சாபம் கொடுக்கப்பட்டது?*

*23. சரி இப்பொழுது, சிதறிப்போன இஸ்ரவேலின் பத்து கோத்திரங்கள் எங்கே (ஆதியாகமம் 44:49) அநேக தேசங்களுக்கான யோசேப்பின் கோத்திரம்? சிமியோன், லேவி, தங்களுக்கென சொந்த தேசம் இல்லாதவர்கள், ஆனால் பத்து கோத்திரங்களுக்கிடையே சிதறி இருப்பவர்கள் ... பத்து கோத்திரங்கள் எங்கே? நம்மால் அதை கண்டுபிடிக்க முடியுமா?*

*24.இன்னும் ஒரே ஒரு கேள்வி:* ***தேவன் யுத்தங்களை நியாயத்தீர்ப்பாக அனுப்பியிருக்கிறார் என்று என்னால் விசுவாசிக்க முடியவில்லை, யுத்தங்களை நியாயத்தீர்ப்பாக தேவன் அனுப்புகின்றார் என்று என்னால் விசுவாசிக்க முடியவில்லை. (சற்று செவிகொடுங்கள்.) தேவனுடைய நியாயத்தீர்ப்பை நிறைவேற்று வதற்காக, குற்றஞ்சாட்டப் பட்டவர்களுடன் - மத்தியில் அப்பாவியான ஸ்திரீகளேயும் பிள்ளைகளையும் கொல்லத்தக்கதாக, ஆதி பாபிலோனிலிருந்து ஹிட்லர் வரை, அவர்கள் போன்ற கொலைபாதகர்களின் கைகளில் பட்டயத்தை தேவன் வைத்தார் என்று சிலர் விசுவாசிப்பது போல, நான் விசுவாசிப்பதில்லை, யுத்தங்கள் சாத்தானின் கிரியைகளாய் இருக்கின்றன. தயவுசெய்து இந்தக் குழப்பத்தை ஊர்ஜீதம் செய்யவும்.***

***

# *54-05-15 COD #4*

***25. கத்தோலிக்க சபையுடன் பிராட்டெஸ்டென்ட் சபை கொண்டிருக்கின்ற தொடர்பு எந்த விதமானது என்ற கூற விழைகிறீர்?***

***26. "மிருகத்தின் சொரூபம்" என்றால் என்ன அர்த்தம்?***

***27. சகோதரன் பிரன்ஹாம், "மிருகத்தின் முத்திரையை" குறித்து பேசுகையில், அவர்கள் உங்கள் தலையில் ஒரு இலக்கத்தை பச்சை குத்துவார்களா அல்லது உங்கள் கையில் ஏதோ ஒன்று பச்சை குத்துவார்கள் என்ற நீங்கள் நம்புகிறீர்களா?*** *இல்லை ஐயா! அதை நீங்கள் எதிர்பார்க்காதீர்கள்.*

*28. ஆகவே பரிசுத்த... இன்னுமாக கைகள் வைக்கப் படுதலினால் பரிசுத்த ஆவி அருளப்படுகின்றதா? சீஷர்கள் பேதுரு, பவுல், இன்னும் மற்றவர் அதைச் செய்தனர், அது இன்னும் சாத்தியமான ஒன்றா? பவுல் அதை இந்த விதமாகத்தானே பெற்றான்.*

*29. உலகத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஜனங்கள் இன்னுமாக கேட்க ... இன்னுமாக சுவிசேஷத்தை கேட்கவில்லை, சுவிசேஷத்தின் வார்த்தை, எவ்வளாக...*

*30. கிறிஸ்தவ - கிறிஸ்தவ விஞ்ஞானத்தை குறித்து நீங்கள் விளக்குகிறீர்களா?*

*31. இப்பொழுது, நாங்கள்... நாங்கள் இங்கிருந்து தொலை தூரத்தில் வசிப்பதால். . . அவர்கள் கூறுகின்றனர்: . கூடாரத்திற்கு வர வேண்டுமானால் நாங்கள் வசிக்கின்ற மிக தொலை தூரத்திலிருந்து இங்கே வரவேண்டியதாக இருக்கிறது. நாங்கள் எங்கு செல்ல நீர் பரிந்துரைப்பீர், இந்த சபைகளெல்லாம் தாய் சபைக்கு அல்லது கத்தோலிக்கத்திற்கு செல்வதை காண்கையில், நாங்களாக ஒன்றாக கூடலாமா?*

*32. கடந்த இரவு நீங்கள் "ஒவ்வொரு கோத்திரத்திலும், தேசத்திலுமிருந்து வந்ததும் ஒருவனும் எண்ணக்கூடாதது மான திரளான கூட்டமான ஜனங்கள்," என்று வெளிப் படுத்தின விசேஷம் 7வது அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளதைக் குறித்து பேசினீர்கள். "அவர்கள் தான் கிறிஸ்துவின் மணவாட்டி' என்று கூறியதை, நான் நீங்கள் கூறியதை சரியாக புரிந்து கொண்டுள்ளேனா?*

*33. வாடிகன் நகரத்தின் மேல் இருக்கின்ற லத்தீன் வார்த்தைகள் என்ன? அவைகள் அறுநூற்றறுபத்தாறு என்று எப்படி வருகின்றது என்பதை நாங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறோம், அவைகள் எதைக் கூற விழைகின்றன.*

*34. இந்த சபையானது ஏன் முன்னேறவில்லை என்பதற்கான காரணத்தை நீர் கேட்டீர். காரணம் என்ன, அது மூப்பர்களில் சிலர் அந்நிய பாஷைகள் மற்றும் சுகமாக்குதல் வரத்தை மறுதலிக்கின்றனர். அது உண்மை என்று நாங்கள் எல்லாரும் அறிவோம்.*

*35. ஒரு கிறிஸ்துவன் கால் கழுவுதலை கைகொள்ள வேண்டுமா, "பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திற்கு பதிலாக இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் (நாமம்) ஞானஸ்நானம் எடுக்க வேண்டுமா என்று தயவு கூர்ந்து விளக்குங்கள். தயவு செய்து.*

*36. ஏன் ஒரு நபர் 'பிதா, குமாரன், பரிசுத்த ஆவிக்கு'' பதிலாக இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும்?*

*37. சகோதரன் பில், கடந்த இரவு நீங்கள் பேசிக் கொண்டிருந்த தவறான ஞானஸ்நானம் என்ன, அது தண்ணீரினாலா அல்லது ஆவியினாலா? தண்ணீர் என்றால், இயேசு கிறிஸ்துவின் நாமம் என்று நீங்கள் கூறினீர்கள், ஏன் மத்தேயு 28:19, ''பிதா, குமாரன், பரிசுத்த ஆவி'' என்று கூறுகிறது? தயவு செய்து விளக்கவும்.*

*38. பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள அந்நிய பாஷையில் பேசவேண்டும் என்று இந்த சபை போதிக்கின்றதா?*

*39. எனக்கு இரண்டு பையன்கள் உள்ளனர் (ஒருவனுக்கு இரண்டு வயது; மற்றொருவனுக்கு ஐந்து வயது), அவர்களுக்கு தெளிப்பு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டுமா?*

*40. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றவர்கள் மாத்திரமே சபையின் எடுத்துக் கொள்ளப்படுதலில்*

*இருப்பார்களா, அல்லது எல்லா விசுவாசிகளுக்கும் தெரியப்படுத்தப்படுமா?*

*41. ஒருவன் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பண்ணப்படவேண்டியிருப்பதால், ஏன் இயேசு மத்தேயு 28ல் "பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுங்கள்" என்று கூறவேண்டும்? அதைத்தான் நான் உங்களுக்கு விவரித்துக் காண்பித்தேன்.*

*42. ஆனால் "பிதா குமாரன் பரிசுத்த ஆவி" ஞானஸ்நானத்திற்கு தேவன் கனத்தை கொண்டிருக்கிறாரா? இந்த நாமத்தில், இந்த நாமங்களில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு பரிசுத்த ஆவியை பெற்ற மக்கள் இருக்கிறார்களா? பிதாவை மகிமைப்படுத்த இயேசு வந்தாரா? இந்த ஞானஸ்நானம் அங்கீகரிக்கப்படுமா?*

*43. பெந்தெகொஸ்தே சபை பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்காமல் இருக்கின்றதா? அவர்களில் சிலர் அவ்விதம் செய்கின்றனர்.*

*44. ஒரு மனிதன் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இல்லாமல் மரித்து போவானானால் அவன் இழக்கப்பட்டுப்போவானா?*

*45. சகோதரன் பில், சூதாட்டத்தைக் குறித்து வேதாகமம் ஏதாவது கூறிகின்றதா?*

*46. ஒன்று கொரிந்தியர் 15:29யை நீங்கள் விளக்கு வீர்களா?*

*47. எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன்பு எசேக்கியல் 38 மற்றும் 39ன் தீர்க்கதரிசனம் நிறைவேறுமா?*

*48. சகோதரன் பில், பிரசங்கி வார்த்தையை கொடுத்துக்கொண்டிருக்கும் போது யாராவது எழுந்து அந்நிய பாஷையில் செய்திகளைக் கூறினால் அது*

***ஒழுங்கிற்கு அப்பாற்பட்ட ஒன்றா? இந்த நபர் இங்கே மூன்று - கேள்விகளை வைத்திருக்கிறார்***

***49. மற்றொரு கேள்வியானது: மேலும் பீட அழைப்பு கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது அவ்விதமாகச் செய்வது ஒழுங்கிற்கு புறம்பான ஒன்றா?***

***50. மூன்று, மூன்றாவது: மேலும் அது ... சபையில் யாராவது ஒருவர் எழுந்து நின்று, ஆராதனையின் போது ஏதோ ஒன்றைக் கூறினதற்காகவோ அல்லது செய்ததற்காகவோ ஒரு ஊழியக்காரனை, புனிதமான மேஜையின் பின்பாக இருப்பவரை கண்டிக்கலாமா? இந்த எல்லா காரியங்களும் கூடாரத்தில் அநேக முறைகள் செய்யப்பட்டுள்ளன.***

***

# *57-09-25 COD #5*

***51. மத்தேயு 25:46-ல் கூறப்பட்டுள்ள, "நித்திய ஆக்கினை" என்பதன் பொருள் என்ன என்பதை விளக்கிக் கூறவும். "ஆனால்..."*** *அதுவே கேள்வியாயுள்ளது.*

***52.*** *அதன்பின்னர், இரண்டாம் கேள்வி:* ***"ஆனால் ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்" என்பது கிட்டத்தட்ட அவர்கள் தேவனுடைய சிந்தையிலிருந்து தள்ளப்படுவார்கள் என்பதைப் போன்றதாயுள்ளதா?***

***53. கர்த்தராகிய இயேசு முழு உலகத்திற்காகவும், அதாவதுஉலகில் உள்ள ஒவ்வொரு நபருக்காகவும்***

*மரிக்கவில்லை என்பது உண்மையல்லதானே? ஆனால் சரியாகக் கூறினால்.*

*54. வேதம் சந்தேகத்திற்கிடமின்றி இவர்கள்... மாட்டார்கள், இவர்கள் இரட்சிக்கப்படமாட்டார்கள் என்று நமக்கு சொல்லுகிறது. ஆகையால்...*

*55. ஆகையால் பாவநிவிர்த்தியானது... ஆதாமினுடைய இனம் முழுவதையுமே பாதுகாப் பிற்காக மறைப்பதற்கானதாயிருந்ததானால், சிலர் தங்களுடைய வாக்குத்தத்தை அல்லது ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொள்ளாத காரணத்தால் அவர்கள் இழக்கப்பட்டுவிட்டனரா அல்லது... வல்ல... சுயாதீன.. அவன் ...நித்திய திட்டங்கள் மற்றும் சர்வ வல்லமையுள்ள தேவனின் நோக்கங்களைக் காட்டிலும் வலிமையான ஆற்றலான ஒன்றாய் இருக்குமா? அது...* (இப்பொழுது இந்த நபர் இந்த இரண்டாம் கேள்வியின் பேரில் இதைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.) *மனிதனுடைய சுயாதீன சித்தம் நித்திய திட்டங்கள் மற்றும் சர்வ வல்ல தேவனின் நோக்கங்களைக் காட்டிலும் வலிமையான ஒரு ஆற்றாலாயிருக்குமா?*

*56. மத்தேயு 28-ம் அதிகாரம். 19-ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்ணீர் ஞானஸ்நானத்தின் பேரிலான பொருள் எனக்குப் புரியவில்லை, இது என்னப்பொருட்படுத்துகிறது?*

*57. காயீன் சர்ப்பத்தின் சந்ததியாயிருந்தானா? (இது ஒரு நல்ல கேள்வி) அப்படியானால், ஆதாம் அவளை அறியும் வரை ஏவாள் ஏன் கருத்தரிக்கவில்லை? அதே.. அடுத்தக் கேள்வியும் அதே விதமாகவே உள்ளது.*

*58. ஏவாள் புசித்தது சரியாக ஒரு ஒரு விருட்சத்திலிருந்த கனியா? அது ஆகாரத்திற்கு நல்லதாயிருந்தது என்று அவள் கண்டாள்.*

***59. நீர், "துன்மார்க்கர் நித்தியமாய் எரியமாட்டார்கள்"... என்று கூறும்போது***... *(நல்லது, நான் இப்பொழுது யேகோவா சாட்சிக்காரர் அதன் பேரில் கூறினதை கூறினேன், நான் கூறினேனல்லவா?)*... ***துன்மார்க்கர் நித்தியமாக எரியமாட்டார்கள் என்று நீங்கள் கூறும்போது, நீர் அது பாதாளத்தில் அல்லது அக்கினிக் கடலில் என்று பொருட்படுத்திக் கூறுகிறீரா? வெளிப்படுத்தின விசேஷம் அதைக் கூறுகிறது என்பதை நான் அறிவேன் (அது 20-வது அதிகாரம்) அதாவது நரகம் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன. அவர்கள் நித்தியமாக எரிந்து போகவில்லையென்றால், அப்பொழுது அவர்கள் என்னவாகிறார்கள்?***

***

# *57-10-02 COD #6*

***60. "நாம் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்"*** *(இந்த கேள்வியில் தான் நான் இருந்தேன் என்பது உங்கள் எல்லோருக்கும் ஞாபகமிருக்கும். இப்பொழுது அது உண்மையாகவே 1 கொரிந்தியர் 12-ல் கண்டுபிடிக் கப்பட்டது).* ***அந்த நேரத்தில் நாம்... புதிய பிறப்பை ஏற்றுக் கொள்கிறோம், இதுவே சம்பவிக்கிறது இது. இது பரிசுத்த ஆவியின் அபிஷேகமா அல்லது பின்னர் பெற வேண்டிய ஒரு ஞானஸ்நானமா, அல்லது இது ஒரு நிரப்பப்படுதலா?***

***61. இயேசுவினுடைய சரீரம் கல்லறையில் இருந்தபோது, அவருடைய ஆவி மூன்று நாட்கள் எங்கேயிருந்தது? அவருடைய ஆவி எங்கேயிருந்தது?***

***62. சபைக்கு வெளியே ஸ்திரீகள் தனிப்பட்ட முறையில் வேலைசெய்வது சரியென்று நீர் நினைக்கிறீரா?***

***63. தயவு கூர்ந்து திரித்துவத்தை விளக்கிக் கூறவும். பிதா, குமாரன் இரண்டு நபர்களாயில்லையென்றால், எப்படி குமாரன் பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருநிது, பிதாவினிடத்தில்... பரிந்து பேச முடியும்?***

***64. வேதவாக்கியங்களின்படி சபையின் சபையின் எடுத்துக் கொள்ளப்படுதலுக்கு முன்னர் அந்த யூதர்கள்... கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வார்கள் என்று நீர் நினைக்கிறீரா?***

✻✻✻

# *57-10-06 COD #7*

***65. ஆதாமும் ஏவாளும் தங்களுடைய பிள்ளைகளை ஏதேனில் உடையவர்களாய் இருந்தபோது, அந்த நேரத்தில் மற்ற ஜனங்கள் பூமியின் மேலிருந்தனரா? ஆதியாகமம் 5-ம் அதிகாரத்தில் உள்ள 16-வசனத்தில் காயீன் நோத் என்னும் தேசத்தில் குடியிருந்து, தன் மனைவியை அறிந்தான் என்று கூறப்பட்டுள்ளது.***

***66. II பேதுரு 2:4, "பாவஞ்செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல் ... நரகத்திலே தள்ளி," I பேதுரு 3:19-ல் ஏன் கிறிஸ்து காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்?***

***67. வெளிப்படுத்தின விசேஷம் 21:19 மற்றும் 20ல் உள்ள கற்கள் எதைப்... பிரதிநிதித்துவப்படுத்துகின்றன?***

***68. வெளிப்படுத்தின விசேஷம் 5-ம் அதிகாரத்தில் உள்ள நான்கு... நான்கு ஜீவன்களை விளக்கவும் விளக்கிக் கூறவும்.***

***69. இருபத்தி நான்கு முப்பர்கள் யாராயிருக்கிறார்கள்? சரி, நான் நினைக்கிறேன் அந்த... இருபத்தி நான்கு மூப்பர்கள் யார்?***

***70. ஆதியாகமம் 38-ம் அதிகாரத்தில் உள்ள சிவப்பு நூல் எதைச் சுட்டிக்காட்டினது?***

***71. வெகுமதிகள் எங்கே... வெளிப்படுத்தின விசேஷம் 11-ம் அதிகாரத்தில் உள்ள இரண்டு சாட்சிகளின் மரணத்தைக் குறித்து அனுப்பப்படவிருக்கிற வெகுமதிகள் என்னவாயுள்ளன?***

***72. நாம் தூதர்களை எப்படி நியாயந்தீர்ப்போம்?***

***73. கொரிந்தியர் முதலாம் நிரூபத்தில் தூதர்கள் நிமித்தமாக முக்காடிட வேண்டும் என்று ஏன் கூறப்பட்டுள்ளது?***

***74. ஆயிர வருட அரசாட்சிக்குப் பிறகு பரிசுத்தவான்கள் எங்கேயிருப்பர்? அவர்கள் எந்தவிதமான ஒரு சரீரத்தை உடையவராயிருப்பர்?***

✻✻✻

# *59-06-28E COD #10*

***75. இப்பொழுது, மேலே உள்ள முதலாவது கேள்வி. ஓ, ஆம், இது ஒரு சிறிய கேள்வியாகும். இது ஒரு கேள்வியல்ல,***

*இது ஒரு... நல்லது, இது ஒரு கேள்வியாகும். இது வாரத்தின் முதலிலே என்னுடைய தனிப்பட்ட பேட்டியை வைக்க விரும்புகிற ஒருவருடைய தாகும்.*

*76. இப்பொழுது மேலே இருக்கின்ற இரண்டாவது கேள்வியானது... சகோதரன் பில், ஆவிக்குரிய வரங்களில் விசுவாசம் கொண்டிராத ஒரு சபையார் மத்தியில், என் மூலமாக தேவன் பயனளிக்கின்ற கிரியை செய்ய முடியுமா?*

*77. இப்பொழுது, அடுத்த கேள்வி: நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிராமல் இருந்தால் நீங்கள் இரட்சிக்கப் படவில்லை என்பது உண்மையா?*

*78. பெந்தெகொஸ்தேயிற்கு பிறகு அப்போஸ்தலர்கள் இராப்போஜனம் எங்காகிலும் எடுத்துள்ளனர் என்பதை எங்காகிலும் உங்களால் காணமுடிகிறதா? மக்கள் வார்த்தையை பகுத்தறிவதில்லை என்று பவுல் கூற முனைந்தானா? தேவனை தொழுது கொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர் மாத்திரம் தான் வழியா? நீங்கள் திராட்சை ரசமும் பிஸ்கட்டும் சாப்பிட்டால் வியாதியும் நித்திரை உங்கள் மேல் வருமா?*

*79 இப்பொழுது, கேள்வி! சகோதரன் பிரன்ஹாம், ஒரு காலத்தில் சாத்தான் (வானத்தில் இருந்த வனாக) பிறகு வெளியே துரத்தப்பட்டானா, அவனும் அவனுடைய தூதர்களும் கீழே பூமிக்கு வந்தார்களா, அல்லது அது யோவான் பத்மு தீவில் கண்ட தரிசனத்தைப் போன்ற ஒன்றா இது? இதை ஏன் நான் கேட்கிறேனென்றால், அது ஒரு தரிசனமாகும் என்று எனக்கு கூறப்பட்டுள்ளது.*

*80. இப்பொழுது இங்கே வேறொரு கேள்வி; இது என்னவென்பதை நாம் பார்ப்போம். சரி. ஐந்து கன்னிகைகளைக் குறித்த உவமையை விளக்கவும். ஒரு கிறிஸ்தவன் பாவம் செய்வானா?*

*81. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கும் சபைகள் ஏன் பெண் பிரசங்கிகளை பிரசங்கம் செய்ய அனுமதிக்கின்றன, ஏன் அவர்களுக்கு அவ்வளவு வல்லமையும் அதிகாரமும் இருக்கிறது?*

*82. ஒன்றுக்கும் மேற்பட்ட உலகம் இருக்கின்றதா?*

*83. ஒன்றுக்கும் மேற்பட்ட வானம் இருக்கின்றதா?*

*84. கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கின்ற ஒரு குழந்தை எடுத்துக் கொள்ளப்படுதலில் செல்லுமா?*

*85. நான் சாத்திரமந்துகளை, (SACRAMENTS) (புனித ஜெபங்களை) செய்யத் துவங்கும் போது கிறிஸ்து ஏன் எனக்கு தோன்றுகிறார்?*

*86. நாம்... (ஓ, ஓ. இங்கே நாங்கள் நிறுத்த விருப்பமில்லை, அப்படித்தானே?) நாம் உலகத்தோற்றத்திற்கு முன்னே இரட்சிக் கப்பட்டிருந்தால் - நாம்?*

*87. அப்படியானால் அப்பொழுது நாம் ஆவிகளாக இருந்தோமா?*

*88. சரீரம், ஆத்துமா, மற்றும் ஆவி இவைகளுக்கிடையே உள்ள வித்தியாசம் என்ன?*

*89. ஏவாள் பிசாசினால் காயினை கர்ப்பந்தரித்தாள் என்கின்ற உங்களுடைய கருத்தை தயவு கூர்ந்து நீங்கள் விளக்கி கூற முடியுமா?*

*90. 1 யோவான் 5:18ல் காணப்படுகின்ற "பாவஞ்செய்யான்" என்றால் என்ன என்று உங்களால் தயவு கூர்ந்து விவரித்து கூற இயலுமா?*

***91. சகோரதன் பில் மத்தேயு 19:9ல் காணப்படுகின்ற வேசித்தனம் மற்றும் விபச்சாரம் இவைகளுக்கு உள்ள வித்தியாசம் என்ன?***

***92. தயவு கூர்ந்து 1 யோவான் 5:16 ஐ விளக்கிக் கூறவும். 1 யோவான் 5, இதோ நான் எடுத்து விட்டேன். மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல் செய்யக் கடவன், அப்பொழுது அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார்; யாருக்கென்றால், மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களுக்கே; மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு, அந்த பாவத்துக்கு வேண்டுதல் செய்ய நான் சொல்வேன்.***

***

# *59-12-19 COD #11*

***93. இன்றிரவு முதல் கேள்வி: சகோ. பிரான்ஹாமே, தொலைகாட்சி உலகத்துக்கே ஒரு சாபம் என்று நான் நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?***

***94. இது நல்ல கேள்வி: வேதாகமத்தில் 1 சாமுவேல் 18:10 போன்ற இடங்களில், தேவனால் விடப்பட்ட பொல்லாத ஆவி செயல் புரிந்தது என்று எழுதப்பட்டுள்ளது. ""தேவனால் விடப்பட்ட பொல்லாத ஆவி" என்பது எனக்குப் புரியவில்லை. தயவு கூர்ந்து இதை விளக்கவும்.***

***95. இது உண்மையில் கடினமான ஒரு கேள்வி (அது அதே நபர் என்று நினைக்கிறேன். ஏனெனில் அதே கையெழுத்து போல் தோன்றுகிறது: குணப்பட்டு எடுத்துக்கொள்ளப்படுதலில் செல்ல ஒரு நபருக்கு பரிசுத்த***

*ஆவி அவசியம் என்னும் போது, கணக்கொப்புவிக்கும் ஆண்டுகளை அடையும் முன்பு மரித்துப்போகும் குழந்தைகளின் நிலையென்ன? அவர்கள் எப்பொழுது உயிரோடெழுவார்கள்.*

*96. அடுத்த கேள்வி, அன்றிரவு நான் கூறினதன் பேரில் யாரோ ஒருவர் விளக்கம் கேட்டிருக்கிறார் என்று நினைக்கிறேன்.) பிள்ளை பேற்றினால் மனைவி இரட்சிக்கப்படுவாள் என்பதை விளக்குங்கள்.*

*97. சகோ. பிரான்ஹாமே (இது டைப் செய்யப்பட்டுள்ளது), ஒருவர் பாஷை பேசி அதன் அர்த்தத்தை அவரே விவரிப்பது வேத ரீதியாகுமா? அப்படியானால் 1 கொரிந்தியர் 14:19 ஐயும் விவரிக்கவும்.*

*98. சகோதரன் பிரான்ஹாமே, போதகர்கள் தங்கள் ஆராதனைகளில் பணத்துக்காக நீண்ட நேரம் நிர்ப்பந்தம் செய்து, கூட்டத்திலுள்ள இத்தனை பேர் இவ்வளவு பணம் கொடுப்பார்களென்று தேவன் அவர்களிடம் கூறினதாக கூறுவது முறையாகுமா? அது சரியா அல்லது தவறாவென்று அறிய விரும்புகின்றேன். அது என் அமைதியை பயங்கரமாக குலைத்துள்ளது.*

*99. பரிசுத்த ஆவி சபையில் கிறிஸ்துமஸ் நாடகம் நடத்தப்படலாமா?*

*100. சகோ. பிரான்ஹாமே, தயவுகூர்ந்து எபிரேயர் 6:4 முதல் 6 வசனங்களுக்கு விளக்கம் தாருங்கள்.*

***

# *59-12-23 COD #12*

***101. பன்றிக்குள் சென்ற அந்த ஆவிகள் இப்பொழுது எங்கே இருக்கின்றன? அந்த பித்து பிடித்த வெறியனிலிருந்து இயேசுவால் வெளியே விரட்டப்பட்டு அந்த நாளிலே பன்றிக் கூட்டத்திற்குள் சென்ற ஆவிகள் எங்கேயுள்ளன?***

***102. ரோமர் 7வது அதிகாரம், 25வது வசனம்.***

***103. இப்பொழுது, நாம் பார்ப்போம். இப்பொழுது இங்கிருக்கின்ற அடுத்த கேள்வி இவ்விதம் இருக்கிறது, உலகம் உண்டாவதற்கு முன்னே முன்குறிக்கப்படுதல் என்றால் என்ன அர்த்தம்; இது வேதாகமத்தில் எங்கு காணப்படுகிறது? உலகம் துவங்குவதற்கு முன்பே முன்குறித்தல்?***

***104, ஒரு மனிதன், தேவனோடு மிகவும் நெருங்கி ஜீவிக்கும் போது அவன் பூமியிலிருக்கையில் அவனால் பாவமே செய்ய முடியாது என்று நீர் கூறினர். அப்படியானால் 1 யோவான் 1:8லிருந்து 10 வரை விளக்கவும்.***

***105. நாம் உயிர்த்தெழுதலில் எந்த ரூபத்தில் இருப்போம்?***

***106. எபிரெயர் 4 மற்றும் 6 விளக்கவும்*** *(சீக்கிரமாக, மிக சீக்கிரமாக நாம் முடித்துவிடுவோம்)* ***அதை எபிரெயர் 10:26வுடன் ஒப்பிட்டு விளக்கவும் - 6 மற்றும் 4,*** *(என்னை மனிக்கவும், 6:4 மற்றும் 10:26. நாம் 10:26ஐ பார்ப்போம், சரி, நான் இங்கே அதை எடுத்துவிட்டேன். பாருங்கள்?)*

***

# *61-01-12 COD #13*

***107.** சகோ. பிரான்ஹாமே, இந்த கேள்விகள் முறைப்படி இல்லாமல் போனால், அவைகளைத் தள்ளி விடுங்கள். அதைக் குறித்து நான் மோசமாக நினைக்கமாட்டேன். அது கர்த்தருடைய கரம் அல்லவென்று அறிந்து கொள்வேன். முதலாம் கேள்வி : சகோ. பிரான்ஹாமே, நீங்கள் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன்... அதாவது நான் மீண்டும்... நான் ஊழியத்துக்கு மீண்டும் வரவேண்டுமென்று நீங்கள் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன், நான் சிந்தனை செய்து அதைக் குறித்து தேவனிடத்திலிருந்து திட்டமானவார்த்தையைப் பெறுவதற்காக காத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இந்நாள் வரைக்கும் அது வரவேயில்லை. முடிவு மிகவும் அருகில் உள்ளதென்று நான் அறிந்துள்ளபடியால், கர்த்தராகிய இயேசு என்னிடம் பேசுவதற்கு நான் இன்னும் காத்திருக்க வேண்டுமா? அல்லது, நீங்கள் இந்நாளில் அவருடைய சார்பில் பேசும் பேச்சாளராக (spokesman) இருப்பதால், என்னிடம் என்ன கூறவேண்டுமென்று உங்களிடம் கூற அவர் பிரீதிப்படுவாரா?*

***108.** நமது விலையேறப் பெற்ற ஆண்டவர் அவருக்காக நான் ஒரு சிறிய காரியத்தைச் செய்ய என்னை அனுமதிப்பாரானால், நான் முன்பு ஊழியம் செய்திருந்து தவறில்இருந்த (அதற்காக நான் வருந்துகிறேன். அதை அவர் இடைப்பிறவரலில் (paranthesis) எழுதியிருக்கிறார். அந்த ஜனசமூகத்தினிடம் சென்று அவர்களுக்கு சத்தியத்தை எடுத்துரைக்க வேண்டுமா? அவர்கள் என் இருதயத்தில் இடம் பெற்றுள்ளனர்.*

***109.** ஒருவர் கிறிஸ்துவின் சரீரத்தில் தனக்கு உரிய ஸ்தானத்தை எவ்விதம் அறிந்து கொள்வது?*

***110. பரிசுத்த ஆவியால் நிறைந்த மக்கள் அனைவருமே விரைவிலோ அல்லது காலந்தாழ்ந்தோ அந்நிய பாஷையில் பேசுகின்றனரா?***

***111. "அந்நிய பாஷைகளில் பேசுதல் என்றால் என்ன?***

***112. அந்நிய பாஷைகளும் தீர்க்கதரிசனங்களும் ஆராதனையின்போது எந்த வரிசைக் கிரமத்தில் உபயோகிக்கப்பட வேண்டும் ...*** *(ஆராதனையின்போது அவை உபயோகிக் கப்படவே கூடாது. பாருங்கள்?)* ***தேவனை மகிமைப்படுத்த... (கூடவே கூடாது!). சபை பக்தி விருத்தியடையச் செய்ய? ஜனங்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், தீர்க்கதரிசியினுடைய ஆவி... (இல்லை, என்னை மன்னிக்கவும். அது வேதாகமம், நான் "ஜனங்கள்" என்று சொல்லவிட்டேன், இல்லை). தீர்க்கதரிசிகளுடைய ஆவி தீர்க்கதரிசிக்கு அடங்கியிருக்கிறது" என்று வேதாகமம் உரைக்கிறதென்று எனக்குத் தெரியும்.***

***113. அவர் எப்பொழுது எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று அவருக்கு எல்லா நேரங்களிலும் ஆவியின் மீது கட்டுப்பாடு உள்ளதா?***

***114. இரண்டுவிதமான வேதாகம பாஷைகள் உண்டா? தனி ஜெபத்தில் பேசப்படும் பாஷைக்கும், சபையில் அர்த்தம் உரைப்பதற்கு பேசப்படும் பாஷைக்கும் வித்தியாசம் உண்டா? பெந்தெகொஸ்தே நாளில் பேசப்பட்ட பாஷை வெவ்வேறு ஜாதியினரால் புரிந்து கொள்ளப்பட்டது; ஆனால்1 கொரிந்தியர் 14:2ல் அந்நிய பாஷை தேவனிடம் பேசப்படுகிறது, மனிதரிடம் அல்ல, 1 கொரிந்தியர் 13 :1... (அது கொரிந்தியர் 13 என்று. எழுதப்பட்டுள்ளது என்று தான் நினைக்கிறேன்)... மனுஷர் பாஷை என்றும் தூதர் பாஷை என்றும் குறிப்பிடுகிறதே.***

***115. மற்றவர்களுக்காக பீடத்தண்டையில் ஜெபிக்கையில், ஒருவர் அந்நிய பாஷையில் பேசுவது சரியா?***

***116. 1 கொரிந்தியர் 14:5க்கு விளக்கம் தாருங்கள்.***

***117. மத்தேயு 18: 10. (ஒரு சகோதரன் மத்தேயு 18:10ஐப் படிக்கிறார் - ஆசி]. "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள், அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'.***

***118. 1 கொரிந்தியர் 14ம் அதிகாரத்தில், 'அன்பை நாடுங்கள்; ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்" என்று கூறப்பட்டுள்ளது. வெப்ஸ்டர் அகராதியில் தீர்க்கதரிசனம் உரைத்தல்: வரப்போகும் நிகழ்ச்சிகளை முன்னுரைத்தல், முக்கியமாக தெய்வீக ஏவுதலினால்' என்று அர்த்தம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு செய்தி... ஆம், அப்படித்தான் வெப்ஸ்டர் கூறியுள்ளார், அதை தான் அந்த சகோதரன் கேட்டார். வரப்போகும் நிகழ்ச்சிகளை முன்னுரைக்காத செய்தி "தீர்க்கதரிசனம்" என்று அழைக்கப்படலாமா?***

***119. இப்பொழுது, 1 கொரிந்தியர் 14:27ன் படி, அந்நிய பாஷைகளில் அளிக்கப்படும் எல்லா செய்திகளுக்கும் அர்த்தம் உரைக்கப்பட வேண்டும், எந்த ஒரு ஆராதனையிலும் அந்நிய பாஷைகளில் மூன்று செய்திகளுக்கு மேல் கொடுக்கப்படக் கூடாதென்று நினைக்கிறேன்.***

***120. சகோதரன் பிரான்ஹாமே, இவைகளில் ஏதாவதொன்று... இது தட்டெழுத்தில் எழுதப்பட்டுள்ளது, இது அழிந்து போயிருக்கிறது.... சகோ. பிரான்ஹாமே, இக்கேள்விகளில் ஏதாவதொன்றுக்கு பதில் சொல்லவோ அல்லது விளக்கம் கூறவோ உங்களுக்கு ஏவுதல் இல்லாமல்***

*போனால், அதை ஒருபுறம் தள்ளி வைத்து விடுங்கள். நான் தவறாக நினைக்கவே மாட்டேன். வேதத்தின்படி, ஒரு மகனின் முழு வேலை என்ன?*

*121. ஒழுங்குக்கு அப்பாற்பட்ட தீர்க்கதரிசனம் உரைத்தல், அல்லது அந்நிய பாஷையில் செய்தி அளித்தல் இருக்குமானால், அதை நாம் எவ்விதம் திருத்த வேண்டும்?*

*122. அர்த்தம் உரைத்தல் இல்லாமல், ஒருவருக்கும் அதிகமானவர்கள் அந்நிய பாஷைகளில் செய்தியைப் பேச அனுமதி உண்டா?*

*123. சகோ. பிரான்ஹாமே, நீர் இந்த சபை காலத்துக்கு தேவனால் அனுப்பப்பட்ட செய்தியாளன் என்று நாங்கள் அறிந்திருக்கிறோம். இயேசுவைத் தொடர்ந்த அதே அடையாளங்கள் உம்மையும் தொடருவதை நாங்கள் காண்கிறோம். உம்மை நன்றாக அறிந்திருக்கும் சிலர் நீர் மேசியா என்று ஏன் நினைக்கிறார்கள் என்பது எங்களுக்குப் புரிகிறது. உமக்கும் தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் தேவனுக்கும் உள்ள உறவில் என்ன வித்தியாசம் என்று விளக்கிக் கூறுவீர்களா?*

*124. உள்ளூர் சபை ஒன்று மற்ற வெளிநாடுகளில் உள்ள தேவைகளை சந்திப்பதற்கு முன்பு, முதலில் தன் உள்ளூர் பொறுப்பை ஏற்று முடிக்க வேண்டியது அவசியமாஇல்லையா? அது தன் தேவைகளைச் சந்தித்து முடித்த பிறகு, அதனால் முடிந்த வரையில் மிஷனரி ஊழியத்துக்கு உதவி செய்வது வேதப்பூர்வமானதா?*

*125. லூக்கா 1:17, யோவான் "எலியாவின் ஆவியை உடையவனாய் வருவதைக் குறித்து தயவு செய்து விளக்குங்கள்.*

*126. பவுல், "முக்கியமான வரங்களை நாடுங்கள்: இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக்*

***காண்பிக்கிறேன்" என்கிறான். அந்த மேன்மையான வழி என்னவென்று தயவுகூர்ந்து விளக்குங்கள்.***

***127. ஒரு சகோதரனுக்கு, தான் கேட்டுக்கொள்ளப் படாமலேயே சபையில் ஒரு ஸ்தானத்தை வகிக்க வேண்டும் என்னும் பலவீனம் இருக்குமானால், அவரை எப்படி குற்றப்படுத்துவது?***

***128. ஒரு இராப்போஜன ஆராதனையில், ஒரு மனிதன் ஜெபித்துக் கொள்ளப்படுவதற்காக பீடத்தண்டையில் வந்தார். இராப்போஜனம் கொடுத்துக் கொண்டிருந்த வேளையில் சகோதரன் பிரான்ஹாம் அப்பம் திராட்சரசம் இவைகளின் பின்னால் நின்று கொண்டிருந்தார். பீடத்தண்டையில் உள்ள மனிதனுக்கு ஜெபிப்பதற்காக இராப்போஜன பொருட்களை விட்டு வர இயலாது என்று அவர் கூறிவிட்டார். தயவு கூர்ந்து இதற்கு விளக்கம் தாருங்கள்?***

***129. தனிப்பட்ட ஊழியக்காரன் என்னும் முறையில் பரிசுத்த ஆவியை நாடிக் கொண்டிருக்கிற ஒரு நபரிடம் எவ்வாறு வேதரீதியாக ஈடுபட வேண்டும்?***

***130. நித்திய பாதுகாப்பில் நம்பிக்கையில்லாத ஒரு பிரசங்கி அல்லது ஒரு கிறிஸ்தவன்.... இல்லை. நித்தியபாதுகாப்பில் நம்பிக்கையில்லாத ஒரு பிரசங்கி அல்லது ஒரு கிறிஸ்தவன் சரியாக இருக்கிறாரா?***

***131. இது கட்டளையா... ஒரு மகன் அல்லது ஒரு தர்ம கர்த்தா அவர்களுடைய சபையின் உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டுமென்பது ஒரு கட்டளையா?*** *ஆம், அது உண்மை. தங்களுடைய சொந்த கருத்து அல்லது வெளிப்பாட்டின் காரணமாக சபை உபதேசங்களுடன் கூட்டுவதோ அல்லது அவைகளிலிருந்து எடுத்து விடுவதோ நியாயமா? இல்லை, ஐயா. இல்லை .*

# *61-07-23E COD #14*

*132. சகோதரன் பில், பெரியவர்களும் சிறு பிள்ளைகளும் மிகவும் சத்தமிட்டுக் கொண்டு ஆராதனையின் போது அங்குமிங்குமாக சென்றுகொண்டிருப்பதைக் குறித்து ஏதாவது கூறுங்கள். பயபக்தியைக் குறித்து இந்த கூடாரத்திற்கு சில பாடங்கள் அவசியமாயுள்ளன.*

*133. இன்று காலையில் ஆறு முதல் எட்டு வயது வரையிலான இரண்டு சிறு பிள்ளைகள் இங்கே பீடத்தண்டை இருந்தனர். அவர்களுக்கு எவ்வளவு சீக்கிரத்தில் ஞானஸ்நானம் கொடுக்கப் படலாம்?*

*134. எங்களுடைய நண்பராயுள்ள ஒரு போதகர் "பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் " நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கின்றார். அவருடைய தவறை நாங்கள் எடுத்துக் கூறாமலிருந்தால் நாங்கள் அதற்கு பதில் கூறவேண்டியவர்களாக இருப்போமா?*

*135. விசுவாச அறிக்கையில் அவர்கள், "மூன்று நபர்களில் இருக்கின்ற, நித்தியமானவராகிய, ஒரே தேவனில் நாங்கள் விசுவாசம் கொண்டிருக்கிறோம். மத்தேயு 28: 19, 18 மற்றும் 19; ஒன்று... கொரிந்தியர் 13:14 " இது மூன்று நபர்களுக்கு பதிலாக மூன்று அலுவல்களாக இருக்க வேண்டுமல்லவா?"*

*136. ஒரு கிறிஸ்தவனோ அல்லது ஒருவளோ தசமபாகம் செலுத்தாமலிருந்தால் பரலோகத்திற்கு செல்ல முடியுமா?*

*137. சகோதரன் பிரன்ஹாம், நான் இரட்சிக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம்*

*பெற்றுள்ளேன், ஆனால் தகர்த்தெறிந்து வெளியே வரவேண்டும் என்று நான் முயற்சி செய்கின்ற, ஆனால் முடியாதிருக்கின்ற, எதற்கும் இணங்காத ஒரு ஆவியிலிருந்து எப்படி என்னால் வெளிவர முடியும்?*

*138. "பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திற்கு பதிலாக ஏன் நீங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கின்றீர்கள்?*

*139. "உயிர்த்தெழுதலுக்கு முன்னர் கிறிஸ்து பாதாளத்தில் இருந்தார்" என்று சிலர் கூறுகின்றனர். இதற்கான வேத வசனம் ஏதாகிலும் உள்ளதா?*

*140. இப்பொழுது கன்னிகைகளில் ஐந்து பேர் இழந்து போகப்பட்டார்கள்?*

*141. சகோதரன் பிரன்ஹாம், 1 கொரிந்தியர் - கொரிந்தியர் 14வது அதிகாரம், வசனம் 34 மற்றும் 35, "சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை" என்று கூறுகிறது. 35ல், "ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக் கியமாயிருக்குமே" என்று உள்ளது. இப்பொழுது, கத்தரிக்கப்பட்ட குட்டை மயிரைக் கொண்ட ஒரு ஸ்திரீ சபைகளில்- சபையில் அந்நியபாஷையில் பேசினால், அவள் மூலமாக பேசுவது பரிசுத்த ஆவியா அல்லது அது ஒரு கள்ள ஆவியா?*

*142. உபாகமம், 23ஆம் அதிகாரம் 2வது வசனம் விவாகத்திற்கு அப்பாற்பட்டு பிறந்த ஒரு மனிதன் இரட்சிக்கப்பட முடியாது என்று போதிக்கிறதா? "தேவன் பெற்றோர் செய்த அக்கிரமத்தை பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவர்" என்று கூறுகிறதே. இது என்னவென்பதை விளக்கவும்.*

*143. எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன்னர் எசேக்கியல் 38 மற்றும் 39 நிறைவேறுமா?*

*144. நாம் இங்கே கேள்விப்பட்ட மற்றும் கண்டிருக்கின்ற காரியங்களைக் குறித்து, அதாவது அவருடைய வருகையின் அருகாமை, இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் மற்றும் காரியங்களைக் குறித்து மற்றவருக்கு சாட்சி கொடுக்க வேண்டு மென்று கர்த்தர் நம்மிடம் தீர்க்கதரிசனம் மூலமாக கூறியிருக்கிறார். கிறிஸ்தவர்களைப் போலக் காணப்படுகின்ற சிலரிடம் இந்த காரியங்களை நாங்கள் கூறியுள்ளோம், ஆனாலும் அவர்கள் அதை விசுவாசிப்பது போல காணப்படவில்லை. அந்த மக்களுக்கு என்ன சம்பவிக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? அவர்கள் எடுத்துக் கொள்ளப் படுதலில் செல்வார்களா?*

*145. சகோதரன் பிரன்ஹாம், தானியேல் 11வது அதிகாரம், 31ஆம் வசனத்தில், அன்றாடபலியை நீக்கி, பாழாக்கும் அருவருப்பை அங்கே வைப்பார்கள் என்ற நாளைக் குறித்து போதிக்கிறது. தயவு கூர்ந்து அவை என்ன என்பதை நீங்கள் விளக்க முடியுமா?*

*146. சகோதரன் பிரன்ஹாம், ஒரு கிறிஸ்தவன் என்று உரிமை கோரும் ஒவ்வொருவனும் தசமபாகங்களை செலுத்த வேண்டுமா, கர்த்தருடைய பண்டகசாலையிலே தங்கள் தசமபாகங்களை செலுத்த வேண்டுமா? இந்த கேள்விக்கான வேத வசனத்தை தயவு கூர்ந்து அளிக்கவும்.*

*147. ஒரு நபர் அல்லது நபர்கள் ஒவ்வொரு முறையும் ஒரே குரல் மற்றும் தொனியில் அதே காரியத்தை அந்நிய பாஷையில் பேசும் போது, அதற்கான வியாக்கியானம் ஒவ்வொரு முறையும் வியாக்கியானம் செய்பவரால் பலவிதமாக வியாக்கியானிக்கப்படும் போது, அது பரிசுத்த ஆவியாக இருக்குமா?*

*148. ஒரு கூட்டத்தில் அந்நிய பாஷையில் ஏற்கெனவே மூன்று செய்திகள் புறப்பட்டு வந்து விட்ட பிறகு, பிறகு ஜெப வரிசையிலும் இன்னுமாக செய்திகள் இருக்கலாமா,*

***மேலும் கூட்டமானது ஆவிக்குரிய ஒழுங்கில் இன்னுமாக இருக்குமா?***

***149. சரி, அருமையான சகோதரன் பிரன்ஹாம், கர்த்தர் எனக்கு சொப்பனங்களில் காரியங்களை அநேக முறை காண்பிக்கின்றார். கடற்படையில் பணிபுரியும் என் மகன் "தெரிவிக்கப்படக்கூடாத இரகசியங்கள் (Secrets)" என்று கூறுகின்ற காரியங்களை தேவன் எனக்கு காண்பித்தார். மக்களுடைய மரணத்தைக் குறித்தும், மக்களுடைய இருதயங்களின் இரகசியங்களையும் எனக்கு காண்பிக்கின்றார். இது தேவன் எனக்களித்த வரமா? மக்களுடைய இருதயங்களையும் சிந்தனைகளையும் தேவன் எனக்கு காண்பிக்கும் போது, சொப்பனத்தில் கண்ட விதமாகவே எல்லாகாரியமும் எப்பொழுதுமே நடந்தேறுகிறது.***

***150. சகோதரன் பிரன்ஹாம், எப்படி ஒரு சபையால்... நடனமாடி, சத்தமிட்டு அந்நிய பாஷையில் பேசி, ஆவியில் நிரம்பி (நாம் பார்ப்போம், இப்பொழுது ஒரு நிமிடம் பொறுத்துக் கொள்ளுங்கள்)... மூழ்க முடிகிறது ஆனால் அதில் எப்பொழுதாவது ஒரு முறை தான் மிக அபூர்வமாக வேத வசனம் வாசிக்கப்படுகிறது, அது எப்படி. இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.***

❊❊❊

# *61-10-15M COD #15*

***151. நாம் அப். 2:38ன்படி ஞானஸ்நானம் பெறுவதில் நம்பிக்கை கொண்டுள்ளோம். மற்றஞானஸ்நானத்தைக் குறித்து நாம் எவ்விதம் ஜனங்களுக்கு பதில் சொல்ல***

*வேண்டும்? அவர்கள் இரட்சிக்கப்பட்டுள்ளனரா இல்லையா? மேலும் தொடர்ந்து சென்று வெளிச்சத்தைப் பெற்றுக் கொள்ளாதவர்கள்?*

*152. தயவுகூர்ந்து எபிரேயர் 6:4 முதல் 6 வசனங்களையும் எபிரேயர் 10:26- 29 வசனங்களையும் விளக்கித் தருவீர்களா? இது பரிசுத்த ஆவி பெற்ற மக்களை குறிப்பிடுகிறதா அல்லது பரிசுத்தமாக்கப்பட்டவர்களையா என்பதையும் விளக்குங்கள்; வித்தியாசம் என்னவென்று விளக்குங்கள்.*

*153. சகோ. பிரான்ஹாமே, பரி. யோவான் 21:15 முதல் 17 வசனங்களில் இயேசு பேதுருவிடம், அவன் தம்மிடத்தில் அன்பாயிருக்கிறானா என்று கேட்டு அவருடைய ஆட்டுக் குட்டிகளை மேய்க்கச் சொல்லிவிட்டு, அதன்பிறகு என் ஆடுகளை மேய்ப்பாயாக' என்று கூறினதன் அர்த்தம் என்ன? 17ம் வசனத்தில் அவர் மறுபடியும், 'என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்கிறாரே?*

*154. சகோ. பிரான்ஹாமே, சிறிது நேரத்துக்கு முன்பு நான் ஜெபவரிசையின் வழியாக வந்த போது அபிஷேகம் பெற்ற கரங்கள் என் மேல் வைக்கப்பட்டு, இரட்சிக்கப்படாத என் கணவருக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. அப்பொழுது நான் தேவனுடைய வல்லமையினால் கொல்லப்படுவது போல ஆட்கொள்ளப்பட்டேன். அவர் இரட்சிக்கப்படுவார் என்பதற்கு இது உறுதியான அடையாளமா?*

*155. சகோ. பிரான்ஹாமே, ஸ்திரீகள் சபையில் பேசக் கூடாது என்பது வேதபூர்வமானது அல்லவா?*

*156. வாழ்த்தும்போது கிறிஸ்தவ மனிதரும் ஸ்திரீகளும் ஒருவரையொருவர் முத்தமிட்டுக் கொள்வது (ஓ!) சரியா?*

*157. ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் உள்ள வித்தியாசத்தை தயவுகூர்ந்து விளக்குங்கள்.*

*158. சகோ.பிரான்ஹாமே, கூட்டத்தில் ஸ்திரீகள் சாட்சி சொல்லலாமா அல்லது அந்நிய பாஷையில் பேசலாமா என்பதை தயவுகூர்ந்து விளக்குங்கள் - தயவுகூர்ந்து தெளிவுபடுத்துங்கள்.*

*159. விவாகமாகி விட்டது. நாம் மணம் புரிய விரும்பினால், முதல் மனைவியிடம் திரும்பிச் செல்ல வேண்டுமென்று வேதம் உரைக்கிறது. முன்பு விவாகமான அவளிடத்தில் நான் திரும்பிச் செல்ல வேண்டுமா, அல்லது நான் சுயாதீனமாயிருக்க வேண்டுமா?*

*160. கத்தோலிக்கருக்குள்ள அறையப்பட்ட இயேசுவின் உருவம் கொண்ட சிலுவையின் (crucifix) மேலுள்ள மூன்று எழுத்துக்களின் அர்த்தம் என்ன?*

*161. சபை கட்டிட நிதிக்காக தசமபாகத்தை உப்யோகிப்பது தவறா?*

*162. சகோ.பிரான்ஹாமே, நாம் கிறிஸ்தவர்களான பிறகு, மேசன்ஸ் போன்ற விடுதியை சேர்ந்து கொள்வது தவறாகுமா?*

*163. கர்த்தரைக் கண்டு கொள்வதற்கு மிகச் சிறந்த வழி என்ன... சில முக்கியமான விஷயங்களில் கர்த்தருடைய சித்தத்தை அறிந்து கொள்ள மிகச் சிறந்த வழி எது என்பதைக் குறித்த உங்கள் கருத்து என்ன?*

*164. நாம் பார்ப்போம். சகோ, பிரான்ஹாமே, உறங்கும் கன்னிகைகள் என்று கருதப்படுபவர் நியாயத்தீர்ப்பின்போது 'நியாயந்தீர்க்கப்படும்போது, அவர்களுக்கு என்ன நேரிடுகிறது?*

*165. பரிசுத்த ஆவியினால் நிறைந்த ஒரு நபர், தனக்கு செய்ய விருப்பமில்லாத சிறு காரியங்களைச் செய்யத் தூண்டப்பட்டு அதை செய்வதற்கு வாய்ப்புண்டா?*

***166. இயேசு பரி. மத்தேயு 16:910 வசனங்களில் கூறினதன் அர்த்தமென்ன? பன்னிரண்டு கூடைகளும் ஏழு கூடைகளும் எதற்கு எடுத்துக்காட்டாயுள்ளன? ஞாயிறு காலைக்கு கேள்வி.***

***167. 1கொரிந்தியர் 12:27ல்கூறப்பட்டுள்ள "கிறிஸ்துவின் சரீரம்' என்பதையும், வெளிப்படுத்தல் 21:9ல் கூறப்பட்டுள்ள "கிறிஸ்துவின் மணவாட்டி' என்பதையும் தயவுகூர்ந்து விளக்குவீர்களா? வெளிப்படுத்தலில் கூறப்பட்டுள்ள புதிய எருசலேம் ஆவிக்குரியதா? அது சபையின் ஆவிக்குரிய பகுத்தறிதலா?***

***168. தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதாக வேதம் உரைக்கிறது. அப்படியானால் நீங்கள் தேவனிடத்தில் அன்புகூர்ந்து, பிறகு உலகத்துக்குத் திரும்பிச் செல்வீர்களானால், நீங்கள் பாவத்தில் மரிக்கும்படி தேவன் விட்டு விடுவாரா, அல்லது அவர் உங்களை எடுத்துக் கொள்வதற்கு முன்பு நீங்கள் ஒப்புரவாகி அவரிடம் திரும்பும்படி செய்வாரா?***

***

# *62-05-27 COD #16*

***169. 1கொரிந்தியர் 7வது அதிகாரம், 15 ஆம் வசனம். இப்பொழுது அவர்கள் கேட்டுள்ள கேள்வி: சகோதரன் பிரன்ஹாம், ஒரு சகோதரியோ அல்லது சகோதரனோ மறுபடியுமாக விவாகம் செய்து கொள்ள தடையில்லை என்று இது குறிப்பிடுகிறதா? இல்லை***

***170. பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பில், கடைசி உயிர்த்தெழுதலில் அக்கிரமக்காரர் எந்த விதமான சரீரத்தை கொண்டவர்களாக இருப்பார்கள்?***

***171. "பின்னும் ஆதாம் மனைவியாகிய ஏவாளை அறிந்தான்; (ஆங்கில வேதத்தில் and என்றும் இணையிடைச் சொல் (conjuction) உள்ளது - தமிழாக்கியோன்) (இணையிடைச் சொல்) அவள் கர்ப்பவதியாகி காயீனைப் பெற்று." நீங்கள் போதிக்கும் எல்லாவற்றையும் நான் விசுவாசிக்கிறேன், ஆனால்... எப்படி... and என்னும் அந்த இணையிடைச் சொல் காரணமாக, ஆதாம் அவளை அறிந்த பிறகு அவள் கர்ப்பந்தரிக்கவில்லை என்று கூறுகின்றவர்களுக்கு எவ்விதம் நான் பதிலளிக்க வேண்டும்.***

***172. நான் கர்த்தரைக் கண்ட வரைக்கும் அநேக வருடங்களாக நான் பாவத்தில் வாழ்ந்தேன். சகோதரன் பிரன்ஹாம், தயவு செய்து... நான் மறுபடியும் பாவம் செய்தேன். ஆகவே இந்த பரிசுத்த ஸ்தலத்தில் உங்களுக்கு முன்பாக வருவதற்கு நான் தகுதியற் றவன். மறுபடியும் முழுவதுமாக திரும்பவும் புதிய வாழ்க் கைக்கு நான் கொண்டுவரப்படமுடியுமா என்று எனக்கு தயவு செய்து கூறுங்கள். சகோதரன் பிரன்ஹாம், தயவு செய்து எனக்கு உதவுங்கள், எனக்குள்ளாக ஒரு பிசாசு இருக்கிறது. எனக்கு உதவி செய்யுங்கள்! நீர் தாமே என் மீது கைகளை வைத்து என்னைத் திரும்பவுமாக கொண்டு வருவீர்களா?***

❊❊❊

# *63-03-24M COD #18*

*173. மத்தேயு 25-ல் கூறப்பட்டிருக்கும் ஐந்து புத்தியுள்ள கன்னிகைகள் மணவாட்டிக்கு ஊழியம் செய்பவர்களா? அல்லது அவர்கள் மணவாட்டியா? இவர்கள் மணவாட்டிக்கு பணிபுரிகிறவர்கள் என்றால், மணவாட்டி எங்கே இருக்கிறாள்?*

*174. சுவிசேஷகர்கள் வயலில் தொடர்ந்து ஊழியம் செய்ய வேண்டுமா?*

*175. ஐந்தாம் முத்திரையின் வெளிப் படுத்தலின்படி மோசேயும், எலியாவும் மரிக்கவேண்டும்; அப்படியானால் ஏனோக்கை குறித்து என்ன?*

*176. வெளிப்படுத்தல் 3:12ல் உள்ள மக்களுக்கு என்ன நாமம் கொடுக்கப்படும்?*

*177. சகோதரன் பிரான்ஹாமே, விவாகரத்துக்குப் பிறகு திருமணம் செய்துக்கொள்ள அனுமதிக்க ஏதாகிலும் வேத வாக்கியம் உண்டா? இது அதிக முக்கியமானதாகும்.*

*178. வெளிப்படுத்தல் 6:6ல் எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே" என்பது எதைக் குறிக்கின்றது?*

*179. சகோதரன் பிரான்ஹாமே, ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகமும்; ஜீவ புஸ்தகமும் ஒரே புத்தகமா?*

*180. சகோதரன் பிரான்ஹாமே, கிறிஸ்து வந்த பிறகு பிறந்த ஒவ்வொரு யூதனும் இரட்சிக்கிப்படுவான் என்பது உண்மையா? 1,44,000 பேர் யார்? பரிசுத்த ஆவியினால் முத்தரிக்கப்படுவதற்காக முன் குறிக்கப்பட்டவர்கள் இவர்களா? அவர்களுடைய ஊழியம் என்ன?*

*181. சகோதரன் பிரான்ஹாமே, சர்ப்பத்தின் வித்து என்னும் செய்தியைக் குறித்து நீங்கள் அதிகக் கடினமாக பிரயாசப்பட்டதினால்... (ஓ. நான் இதைக் காணவே இல்லை. இது என்னைவிட்டு நழுவிப்போனது)... இந்த வாரத்தில் சர்ப்பத்தின் வித்தைக் குறித்து, இந்த கேள்வியைக் கேட்பது சரியாக இருக்குமா? என்னுடைய நண்பர்கள் ஆதியாகமம் 4:1ஐ விளக்கும்படி கேட்டார்கள், என்னால் அது முடியவில்லை. நீர் எனக்கு உதவி செய்வீரா?*

*182. யூதர்களுக்கு பிரசங்கிக்க வரும் எலியா, உலகத்தில் வாழ்ந்த அந்த உண்மையான மனிதனா, அல்லது எலியாவின் ஆவி மற்றொரு மனிதனுக்குள் வருவதா?*

*183. சகோதரன் பிரான்ஹாமே, ஞானஸ்நானத் தைக் குறித்து நீர் எனக்கு தயவு செய்து பதில் உரைப்பீரா? மத்தேயு 28:19 பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று போதிக்கிறது; பேதுரு, அப்போஸ்தலர் 2:38ல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் என்று போதிக்கிறார். அப்போஸ்தலர் நடபடிகளில் எப்பொழுது இந்த மாறுதல் வந்தது? இப்பொழுது நான் கர்த்தராகிய இயேசுவில் விசுவாசிக்கிறேன்.*

*184. சகோதரன் பிரான்ஹாமே, இந்தக் கேள்வி இதில் பொருந்தவில்லை என்றால்... பதில் கூறவேண்டாம்.* (அது நல்லது, நான் அதைப் பாராட்டுகிறேன்) *மிகவும் சிறியவர்களாகிய பிள்ளைகள் எடுத்துக் கொள்ளப்படுதலில் செல்வார்களா? உமக்கு நன்றி.*

*185. நரகமும், அக்கினியும் கந்தகமும் எரியும் கடலும் ஒன்றா?*

*186. இல்லையென்றால் அக்கினிக்கடலாகிய நரகம் நித்தியமானதா?*

*187. சகோதரன் பிரான்ஹாமே, முதலாம் முத்திரையில், முதலாம் குதிரையின் மீது ஏறியிருந்தவன் 2*

*தெசலோனிக்கேயரில் (2ம் அதிகாரம்)* ***உரைக்கப்பட்டுள்ளபடி, பாவ மனுஷனின் வெளிப்பாட்டின் நிறைவேறுதலா?***

***188. கிறிஸ்துவின் மணவாட்டியில் இல்லாமல் பலவித ஸ்தாபனங்களிலிருக்கும் மறுபடியும் பிறந்த விசுவாசிகளுக்கு என்ன நேரிடும்? அவர்களுக்கு என்ன நேரிடும்?***

***189. சகோதரன் பிரான்ஹாமே, எலியாவின் ஆவியைப்பெற்ற ஏழாம் தூதனும், எடுக்கப்படுதலுக்குப் பிறகு உள்ள மூன்றரை வருடங்களில் 1,44,000 யூதர்களிடத்திற்கு அனுப்பப்படும் எலியாவும் ஒரே மனிதன்தானா? எங்களில் சிலர் இதைக் குறித்து குழப்பத்தில் இருக்கிறோம்.***

***190. தானியேல் 9:27ல் உள்ள உடன்படிக்கை எப்போது ஒரு வாரத்திற்கு உறுதிப்படுத்தப்பட்டது?***

***191. நீங்கள் அவருடைய தெரிந்து கொள்ளப்பட்டவர்களில் ஒருவராயிருப் பீர்களானால், மணவாட்டி எடுத்துக் கொள்ளப்படும்போது அதில் போவீர்களா?***

***193. கிறிஸ்துவின் மணவாட்டியும், கிறிஸ்துவின் சரீரமும் ஒன்று தானா?***

***194. எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன்பு கிறிஸ்துவின் மணவாட்டிக்கு ஊழியம் இருக்குமா?***

***195. வெளிப்படுத்தல் 5,9 வசனங்களில் ஆட்டுக்குட்டியானவர் ... கையிலிருந்து புஸ்தகத்தை வாங்கும்போது பாடிக் கொண்டிருப்பவர்களாகக் காணப்படுவர் எடுத்துக் கொள்ளப்பட்ட பரிசுத்தவான்களா?***

***196. வெளிப்படுத்தல் 6:11ல் வெள்ளை அங்கி கொடுக்கப்பட்டவர்களுடன் ஆட்டுக்குட்டியானவரின்***

*இரத்தத்தில் தங்கள் அங்கிகளை தோய்த்து வெளுத்தவர்களை ஒப்பிட முடியுமா?*

*197. சகோதரன் பிரான்ஹாமே, தேவபக்தியுள்ள அனைவரும் எடுத்துக் கொள்ளப்படுதலில் சென்று விட்டால், எலியாவும் மோசேயும் எங்கிருந்து வருவார்கள்? அவர்கள் யூதர்களாயிருப்பார்களா? அல்லது எங்களுக்கு அளிக்கப்பட்ட எலியா அவர்களுடன்கூட இருப்பாரா?*

*198. வெளிப்படுத்தல் 6:6ல் உள்ள கோதுமையும் திராட்சரசமும்...*

*199. நாம் கர்த்தருடைய சரீரத்தை நிதானித்து அறியாததே அநேகர் வியாதியுள்ளவர்களாக இருப்பதற்கு காரணமாயிருக்கலாம் அல்லவா?* (உண்மை) *ஆறாம் முத்திரை திறக்கப்பட்டதால் அது இப்பொழுது வெளிப்பட்டுள்ளதே...*

*200. முன்குறிக்கப்படாத எவராவது கர்த்தரை ஏற்றுக் கொள்ள முடியுமா? அப்படிச் செய்தால், அவர்கள் விழுந்து போவார்களா?*

*201. கத்தோலிக்க மார்க்கம் யூதர்களை ஏமாற்றி அவர்களுடைய செல்வத்தை எடுத்துக்கொள்ளும் என்று காண்பிக்கும் வேதவாக்கியம் எங்குள்ளது?*

*202. ஒருவன் நமது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் இருந்து கொண்டே, அவனுடைய மன சாட்சி கூறுபவைகளை அல்லது இக்கடைசி கால சத்தியத்தை எடுத்துரைத்தால், அவன் "வேசியாகக்" கருதப்படுவானா? ஒருவன்... ஸ்தாபனத்தில் இருந்து கொண்டே ...*

*203. சகோதரன் பிரான்ஹாமே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துதல்கள். மத்தேயு 22:11ல் உள்ள மனிதன் யாரென்பதை விளக்கமாய்க் கூறுங்கள் - அதாவது கலியாண வஸ்திரம் தரிக்காத மனிதன்..... கல்யாண*

*வஸ்திரமில்லாமல் இந்த மனிதன் பரலோகத்திற்குச் செல்ல முடியாது என்று நானறிவேன். அவன் விருந்தாளியென்று எனக்குத் தெரியும்: மணவாட்டியல்ல.*

*204. மல்கியா 4ல் கூறப்பட்ட எலியாவும். வெளிப்படுத்தல் 11:3ல் உரைக்கப்பட்ட எலியாவும் ஒருவரா? மற்ற இரண்டு சாட்சிகளும் வெவ்வேறு நபர்களா?*

*205. 1 இராஜாக்கள் 19 - (சகோதரன் பிரான்ஹாம், நான் நம்புகிறேன்)பாகாலுக்கு முன்பாக முழங்காற் படியாதவரின் எண்ணிக்கை...*

*206. சகோதரன் பிரான்ஹாமே, எலியா மூன்று முறை வர வேண்டுமென்று அறிகிறேன். அவன் ஏற்கனவே இரு முறை வந்து விட்டானென்றும், அவன் மறுபடியும் வருவானென்றும் நீர் கூறுகின்றீர். அந்த எலியாவின் ஆவியைத் தன்மீது கொண்டுள்ளவன், இரண்டு பேர்களாகிய மோசே, எலியா என்பவர்களில் ஒருவனாக இருப்பானா?*

*207. எடுத்துக் கொள்ளப்படுதல் நிகழ்ந்த பின்பு, எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்கு கொள்ளாத சபை ஏதாவது முடிவில் இரட்சிக்கப்படுமா?*

*208. சகோதரன் பிரான்ஹாமே, முதலாம் முத்திரையின் பிரசங்கத்தில் தானியேலின் எழுபது வாரங்களைக் குறித்து நீங்கள் குறிப்பிடுவதை நான் கவனித்தேன். தானியேலைக் குறித்த ஒலிநாடாவில், சுவிசேஷம் யூதர்களிடம் திரும்பும்போது, எழுபது வாரங்கள் தொடங்கும் என்பதாக அறிகிறேன். யூதர்களுக்கு ஒரு வாரம்- ஏழு வருடங்கள் விடப்பட்டுள்ளதா? அல்லது வாரத்தின் பாதி மாத்திரமே - மூன்றரை ஆண்டுகள் - விடப்பட்டுள்ளதா?*

*209. சாத்தான் ஆயிர வருஷம் கட்டப்பட்டு, வெளிப்படுத்தல் 20:8ல் கூறப்பட்டுள்ள யுத்தத்திற்காக அவிழ்த்து விடப்படுவதைக் குறித்து தயவுசெய்து விவரிக்கவும். இதற்கும் நான்காம் முத்திரையில்*

***கூறப்பட்டுள்ள அர்மெகதோன் யுத்தத்திற்கும் என்ன சம்பந்தம்? புதிய பூமியிலுள்ள மனிதர்களிலிருந்து கோகும் மாகோகும் சேர்க்கப்படுவார்களா?***

***210. ரோமன் கத்தோலிக்க சபையினரால் கொல்லப்பட்ட ஆறு கோடியே எண்பது இலட்சம் பேர், சரித்திரத்தில் எந்த சமயத்தில் கொல்லப் பட்டனர்? அது எவ்வளவு காலம் நீடித்தது?***

***211. சகோதரன் பிரான்ஹாமே, 1 இராஜாக்கள் 19:18ம் வசனத்தில் "ஆனாலும் பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம் பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன்" என்று எழுதப்பட்டுள்ளதே! அந்த எழுநூற்றைக் குறித்து தயவுசெய்து விவரிக்கவும்.***

***212. சகோதரன் பிரான்ஹாமே, எடுத்துக் கொள்ளப்படுதல் நிகழும்போது, சரியானவைகளுக்கும் தவறானவைகளுக்கும் வித்தியாசம் அறியாத இச்சிறு பிள்ளைகள் அதில் செல்வார்களா?***

***213. சகோதரன் பிரான்ஹாமே, எலியாவின் பிரசங்கத்தின் மூலம் எழுநூறு பேர் இரட்சிக்கப்பட்டனர் என்று சென்ற இரவு கூறினீர்கள். நீங்கள் அர்த்தம் கொண்டது ஏழாயிரம் பேர் அல்லவா?***

***214. சகோதரன் பிரான்ஹாமே நீங்கள் ஏழாவது முத்திரையைத் திறந்த பிறகு, கிருபையின் காலம் முடிவு பெறுமா?***

***215. மணவாட்டி எடுத்துக்கொள்ளப்பட்டபிறகு, உபத்திரவத்தின் வழியாக போக வேண்டியுள்ள சபையானது எப்போது நியாத்தீர்ப்பு பெறுகிறது?*** *(அது நியாயத்தீர்ப்புக்கு வருவதில்லை).* ***அது ஆயிர வருஷ அரசாட்சிக்கு முன்பா அல்லது அதற்குப் பிறகா?***

***216. கம்யூனிஸம்*** *(பொது உடைமைக் கொள்கையானது)* ***நேபுகாத்நேச்சார் இராஜாவைப் போல, தேவனால் தம்முடைய நோக்கம் நிறைவேறத்தக்கதாக எழுப்பப்பட்டதென்று நீங்கள் அநேக முறை சொல்லியிருக்கிறீர்கள். கடைசியில் உண்டாகப்போகும் உலக நிலையில் கம்யூனிஸம் எந்த ஸ்தானத்தில் பொருந்தும்? அது எவ்விதம் முடிவடைகிறது? வேதத்தில் சொல்லப்பட்டுள்ள வட திசை இராஜ்ஜியங்களாகிய கோகும் மாகோகும் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம் பண்ணப் போகும் என்று அநேக கல்விமான்கள் நம்புகிறார்கள்.*** *(அது என்ன வென்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை ஆம், ஆம்).* ***கம்யூனிஸம் கடைசியில் கத்தோலிக்க ஸ்தாபனத்தை அல்லது வாடிகனை*** *(ரோமாபுரியில் போப் வசிக்கும் அரண்மனையை, ஆட்சி முறையை - தமிழாக்கியோன்)* ***வெடியினால் அழிக்கும் என சில ஒலிநாடாக்களில் நீங்கள் கூறியிருக்கிறீர்களென நம்புகிறேன். இது சரியா?***

***217. சகோதரன் பிரான்ஹாமே, கடைசி மூன்றரை வருடங்களில் ரோமாபுரியானது யூதர்களின் அரசாங்கத்தை எடுத்துக்கொள்ளும் என்று கூறினீர்கள். அது... உபத்திரவ காலத்தின் முதல் மூன்றரை வருடங்களா அல்லது கடைசி மூன்றரை வருடங்களா? இது சரியா?***

***218. எனது அருமை சகோதரனே, 1 இராஜாக்கள் 17 அதிகாரத்தில் எலியா தீர்க்கதரிசி செய்ததாகச் சொல்லப்பட்டிருப்பது போல மல்கியா 4:5ல் குறிப்பிடப்பட்டிருக்கும் எலியா தீர்க்கதரிசியும் வனாந்திரத்திற்குச் செல்வாரா?***

***219. தேவன் ஒரே ஆள் தத்துவம் உள்ளவராயிருந்தால், மறுரூபமலையில் அவர் ஏன், எப்படி தம்மிடமே பேச முடியும்?***

***

# *63-12-26 COD #19*

***220.* உணவுக்கும் துணிக்கும்... பொருளாதார உதவிக்கென வேண்டுகோள்கள் வரும்போது சபை எவ்விதம் செயல்பட வேண்டும்? என்ன - என்ன செயலை, சபை என்ன செய்ய வேண்டும்?**

***221. அந்நிய பாஷைகள் பேசுதலும் அர்த்தங்கள் உரைத்தலும் ஆராதனைக்கு முன்பு நடைபெறும் கூட்டத்தில் செய்யப்பட வேண்டும் என்று பிரசங்க பீடத்திலிருந்து பகிரங்கமாகக் கூறினால் போதுமா?***

***222. சபையில் ஒழுங்கைக் கடைபிடிக்க, டீக்கன்மார்கள் ஜனங்களை அதைக் குறித்து அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டேயிருக்கும் முறையைக் காட்டிலும் சிறந்த முறை வேறெதாகிலும் உண்டா?***

***223. இப்பொழுது, சகோ. பிரன்ஹாமே, ஞாயிறு பள்ளியைக் குறித்தென்ன? சகோ. பிரன்ஹாமே, ஞாயிறு பள்ளியைக் குறித்தென்ன? (சரி), அது பிரசங்க ஆராதனைக்கு முன்பு நடத்தப்பட வேண்டுமா?***

***224.* வயது வந்தவர் வகுப்பிற்கான *(adult class)* ஆசிரியராக, போதகரைத் தவிர வேறு யாராகிலும் இருக்க வேண்டுமா?**

***225. எத்தனை வகுப்புகள் இருக்க வேண்டும்?***

***226. யார் ஆசிரியர்களாக இருக்க வேண்டும்?***

***227. ஞாயிறு பள்ளியை ஒழுங்காக நடத்த அதற்கு யார் அதிகாரியாக இருக்க வேண்டும்?***

***228. சகோ. பிரன்ஹாமே, சபை ஒழுங்கு விஷயத்தில், புது பிரதிஷ்டை பண்ணப்பட்ட போது எங்களுக்கு அளிக்கப்பட்ட ஒழுங்கைக் கடைபிடிக்க நாங்கள் முயன்று வருகிறோம். அவ்விதம் செய்ததனால் சிலர் கோபங் கொண்டு சபையை விட்டு விலகிச் சென்றனர். வேறு சிலர், முக்கியமாக பிள்ளைகள், நாங்கள் கூறுவதற்கு செவி கொடுக்க மறுக்கின்றனர். பிள்ளைகளைக் குறித்து அவர்களுடைய பெற்றோரிடம் நாங்கள் பேசினோம், அவர்களோ அவர்களைக் கவனித்துக் கொள்வதில்லை. நாங்கள் தவறாகப் புரிந்து கொண்டோமா? அல்லது அதை தவறான விதத்தில் கடை பிடிக்கிறோமா? நன்றி.***

***229. சகோ. பிரன்ஹாமே...*** *இந்த அட்டையில் மூன்று, இரண்டு கேள்விகள் உள்ளன.* ***சகோ. பிரன்ஹாமே, ஜனங்களுக்காக சபையில் காணிக்கை எடுக்கும் விஷயத்தில் கைக் கொள்ளப்பட வேண்டிய கொள்கை என்ன? இதை எவ்விதம் செய்ய வேண்டும்?***

***230. ஒலிநாடாக்களைக் குறித்தென்ன? (அது கேள்விக் குறியைக் கொண்டுள்ளது). ஏனெனில் அநேகர் அலுவலகத்துக்கு கடிதம் எழுதி, ஒலிநாடாக்களின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக் கையைக் குறித்து உங்களைக் குறை கூறுகின்றனர். மேலும் திரு. மக்கையர் ஒலிநாடாக்களின் விற்பனைக்கு உரிமை தொகை வழங்கிக் கொண்டிருக்கையில், மற்றவர்கள் சபையில் ஒலிநாடாக்களை விற்கின்றனர்.***

***231. சகோ. பிரன்ஹாமே, சபையில் ஒழுங்கை நிலை நாட்ட ஒரு மக்கன் எவ்வளவு தூரம் செல்லலாம்? நாங்கள் ஒழுங்கை நிலை நாட்டலாமா? அல்லது நாங்கள் என்ன செய்ய வேண்டு மென்று சகோ.நெவில் எங்களிடம் கூறும் வரைக்கும் காத்திருக்க வேண்டுமா?***

***232. தயவு கூர்ந்து...***

*இது அடுத்த கேள்வி. இன்னும் ஒரு கேள்வி உண்டென்று நினைக்கிறேன். அதன் பிறகு நாம் முடித்து விடுவோம்.*

***தயவு கூர்ந்து அந்நிய பாஷை பேசும் வரங்கள் நமது சபையில் எவ்வாறு இயங்க வேண்டும் என்று தயவு கூர்ந்து விளக்குங்கள்.*** *அதை நான் ஏற்கனவே செய்து விட்டேன்.* ***சபை எப்பொழுது ஒழுங்கு படுத்தப்பட வேண்டும். அல்லது எப்பொழுது வரங்கள் இயங்க வேண்டும்?*** *இப்பொழு தான் நாம் அதை விவரித்தோம்.*

*233.* ***எத்தனை கி-றி-ஸ்-து-ம்... உன்னால் இதை படிக்க முடிகிறதா?*** *(பில்லி பால் "வாத்தியக் கருவிகள் என்று சகோ. பிரன்ஹாமுக்கு படித்துக் காண்பிக்கிறார் - ஆசி).* ***ஓ, வாத்தியக் கருவிகள். ஆர்கனையும் பியானோவையும் தவிர, சபையில் எத்தனை வாத்தியக் கருவிகள் இருக்கலாம்?***

*234.* ***டீக்கன்மார்களாகிய நாங்கள் ஜனங்களை பிரகாரத்தில் முன்பும் பின்பும்... தயவு செய்து விளக்குங்கள்*** *(பில்லி பால் சகோ. பிரன்ஹாமுக்கு கேள்வியைப் படித்துக் காட்டுகிறார்: "சபை ஆராதனைக்கு முன்பும் அதற்கு பின்பும் நாங்கள் ஜனங்களை பிரகாரத்தில் எவ்விதம் அமைதியாக வைத்திருப்பது? " - ஆசி). ஓ, சரி.*

*235.* ***சகோ. பிரன்ஹாமே, ஆராதனையின் துவக்கத்தில் எங்களுக்கு தருணம் இருந்த போது, நான் - நான்... புகா... அவர்களிடம், "புகார்கள் வந்தன. இது மிகவும் சிறிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. "என்னிடம் புகார்கள் வந்தன." இல்லையா?*** *(பில்லி பால் 'ஆம்' என்று சொல்லிவிட்டு, சிறு எழுத்துக்களில் எழுதப்பட்ட கேள்வியைப் படிக்க உதவி செய்கிறார் - ஆசி )* ***புகார்கள் வந்தன. ஆராதனையின் துவக்கத்தில் எங்களுக்கு.... (பார்ப்போம்.... எங்களுக்கு பாடல்கள், சாட்சிகள், ஜெபியுங்கள், ஜெப விண்ணப்பங்கள், விசேஷித்த பாடல்கள்... அதன் பிறகு... செய்திக்கு வரும் போது***

***பதினொன்று மணி... அல்லது அதற்கு அதிகமாகவும் ஆகிவிடுகின்றது. இதன் விளைவால் வார்த்தைக்கு அதிக நேரம் இருப்பதில்லை. சிலர் அமைதியற்ற நிலை அடைந்து ஆராதனை முடியும் முன்பே போய் விடுகின்றனர். எத்தனை பாடல்கள் பாட வேண்டும், செய்தியை எத்தனை மணிக்குத் தொடங்க வேண்டும் என்பதைக் குறித்து விவரித்துக் கூறுங்கள். சில நேரங்களில் எங்களுக்கு ஜெப விண்ணப்பங்கள் இருந்து, அது சாட்சி கூட்டமாக முடிவடைகிறது. சில காரியங்கள்... அந்த நேரத்துக்கு சரியென்று படவில்லை.***

❊❊❊

# *64-08-23M COD #20*

***236. மத்தேயு 24:19ல் உரைக்கப்பட்டுள்ள, "அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் பால் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ" என்பதன் அர்த்தம் என்ன?***

***237. மத்தேயு 24:24: "கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். இவர்களை நாம் எவ்விதம் அடையாளம் கண்டு கொள்ளலாம்?***

***238. மத்தேயு 24:26 (அடுத்த கேள்வி) "அறைவீட்டையும்" "வனாந்தரத்தையும் குறிப் பிடுகிறதே. அதன் அர்த்தம் என்ன?***

***239. மத்தேயு 24:28 (அந்த நபர் தொடர்ந்து கீழே வந்து கொண்டிருக்கிறார். அவர் கையொப் பமிடவில்லை; ஆம், அவர் கையொப் பமிட்டிருக்கிறார். உங்கள் மன்னிப்பைக்***

*கோருகிறேன். இந்தப் பெயர்களை நான் அறிவிக்கப் போவதில்லை, ஏனெனில் அது அவசியமில்லை. பாருங்கள்?) மத்தேயு 24:28: "பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும். பிணம் யார்? கழுகுகள் யார்?*

*240. எடுத்துக் கொள்ளப்படுதலின் போது மணவாட்டி ஓரிடத்தில் ஒன்றாக கூடியிருப்பாளா, அது மேற்கு பாகத்தில் இருக்குமா?*

*241. அன்புள்ள சகோ. பிரான்ஹாமே, என் கேள்வி ஞானஸ்நானத்தின் பேரில் ஒருவன் எப்பொழுது இரட்சிக்கப் படுகிறான்? ஒருவன் விசுவாசிக்கும் போது தான் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நாம் தண்ணீர் ஞானஸ்நானம் பெறாமலிருந்தாலும், அப்.10:47ல் கொர்நேலியுவின் விஷயத்தில் நடந்தது போல, நாம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வோமானால் இரட்சிக்கப்படுவதாக சிலர் கூறுகின்றனர். தமஸ்குவுக்குப் போகும் வழியில் பவுல் இரட்சிக்கப்பட்டதாக சிலர் கூறுகின்றனர், ஆனால் அதற்கு மூன்று நாட்களுக்குப் பிறகும் அவனுடைய பாவங்கள் அவனில் குடி கொண்டிருந்ததாக அப். 22:16 உரைக்கிறது. கொர்நேலியுவைப் போல ஒருவன் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டு, அவன் தண்ணீர் ஞானஸ்நானம் பெறாததால் அவனுடைய பாவங்கள் அவனில் நிலைத்திருக்க வாய்ப்புண்டா? ஒருவன் பரிசுத்த ஆவியைப் பெற்றும் கூட தண்ணீர் ஞானஸ்நானம் பெறாமல் பரலோகத்துக்குப் போக முடியாதா?*

*242. ஆதியாகமம் 6:4ல், 'ஜலப்பிரளயத்துக்குப் பிறகு இராட்சதர் எங்கிருந்து வந்தனர்?*

*243. அன்புள்ள சகோ. பிரான்ஹாமே, உண்மையான, மறுபடியும் பிறந்த விசுவாசிகளின் குமாரர் குமாரத்திகள் அனைவரும் இரட்சிக்கப்படுவார்களா?*

*244. சகோ. பிரான்ஹாமே, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்... (ஓ, ஓ! இந்த கேள்வியை நான் படித்த ஞாபகம் உள்ளது. நான்... அதற்கு பிறகு பதிலளிக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தேன், ஆனால் அதை இப்பொழுதே படித்து விடுவது நல்லது. அது ஏதோ ஒரு ஸ்திரீயின் கையெழுத்து. அவள் கென்டக்கியிலிருந்து வந்தவளாக இருக்க வேண்டும். ஏனெனில் அவளிடம் இங்கு காஸ்மாஸ் போர்ட்லாண்டு சிமெண்டு டிக்கெட் உள்ளது). சகோ. பிரான்ஹாமே, சபையிலுள்ள நமது சகோதரிகள் இப்படிப்பட்ட குட்டை உடைகளை உடுத்துவதைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அது நமது சாட்சியைக் குலைப்பதுடன் நமது சபையிலுள்ள இளைஞர்களுக்கு ஒரு தவறான உதாரணமாயிருக்குமல்லவா? வளர்ந்த ஒரு ஸ்திரீ அவ்வளவு குட்டை உடை உடுத்தினால், அவள் நடக்கும்போது அவளுடைய முழங்கால் காணப்படுகிறது.*

*245. சகோ. பிரான்ஹாமே, இந்நாளுக்கான தேவனுடைய செய்தியை நான் ஏற்றுக் கொண்டு விட்டேன், எங்கள் மகனும் கூட. நாங்கள் இருவரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம். என் கணவர் செய்தியை ஏற்றுக் கொள்ளவில்லை, அவர் இந்த செய்தியை எதிர்த்துப் போராடுகிறார். எங்கள் மகனை அவர் வசீகரித்து அவனை மெதோடிஸ்டு சபைக்குக் கொண்டு செல்கிறார். நமது கூடாரத்தில் ஆராதனை இல்லாத போது அவருடன் நான் அந்த சபைக்குச் செல்ல வேண்டும் என்கிறார். அவருடன் நான் செல்வது சரியா, அல்லது அந்த ஸ்தாபனத் திலிருந்து விலகியிருத்தல் நலமாயிருக்குமா?*

*246. சகோ. பிரான்ஹாமே, நீர் போதிக்கும் செய்தியை என் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறேன். அது என் ஆத்துமாவை சிலிர்க்க வைக்கிறது; எனினும், என் மனைவியும் மகனும் வார்த்தையில் களிகூருவதில்லை.*

*அவர்களுடைய உலகப்பிரகாரமான பழக்கங்களிலிருந்து தங்களைப் பிரித்துக் கொள்ள அவர்களுக்கு மனமில்லை. நமது குடும்பங்களை நாம் உரிமை கோரி தேவனிடம் கேட்க வேண்டுமென்று நீர் கூறினீர். அவர்கள் வார்த்தைக்காக அல்லது வார்த்தையில் வாழாமலிருப்பதைக் காணும்போது, அதை செய்வது எனக்கு கடினமாயுள்ளது. நான் கடைபிடிக்க வேண்டிய வழி எது, ஐயா? அவர்களை நான் உரிமை கோரி விசுவாசிப்பதா, கேள்விகளும் பதில்களும் அல்லது"பிதாவே, உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" என்று ஜெபித்து, இப்பொழுது நான் இருக்கும் இந்த நிலையில் திருப்தியடைவதா? உம்முடைய புத்திமதியை நான் பாராட்டுவேன், சகோ. பிரான்ஹாமே.*

*247. சகோ. பிரான்ஹாமே, இந்த கேள்வி இங்குள்ள எங்கள் பலருக்கு ஒருவிதம் குழப்பமாயுள்ளது. சில ஒலி நாடாக்களில், மணவாட்டி எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு யூதர்கள் மட்டும் இரட்சிக்கப்படுவதாக நீர் கூறியிருக்கிறீர் (அது கோடிடப்பட்டிருக்கிறது). எடுத்துக் கொள்ளப்படுதலில் போகாதிருக்கிற புறஜாதிகளைக் குறித்து தயவுகூர்ந்து முழுவதுமாக விளக்கவும். எடுத்துக் கொள்ளப்படுதலில் விடப்பட்ட புறஜாதிகள் உபத்திரவ காலத்தின் வழியாக கடந்து சென்றுதங்கள் ஜீவனை இயேசுவின் காட்சியினிமித்தம் கொடுத்தார்கள் என்று நீர் கூறினீர் என்று எண்ணினேன். அவர் புறஜாதிகளிலிருந்து யூதரிடம் திரும்பும்போது புறஜாதிகள் இரட்சிக்கப்பட இனி வேறு தருணமே இராதா, இரட்சிக்கப்பட்டு ஆனால் கடைசி கால சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் உபத்திரவ காலத்தின் வழியாக கடந்து சென்று முடிவில் இரட்சிக்கப்படுவார்கள். இது சரியா? தயவு செய்து விளக்குங்கள். ஏனெனில் மிகவும் சிறிய எண்ணிக்கையே எடுத்துக்கொள்ளப் படுதலில் செல்வார்கள். என்று கூறியிருக்கிறீர். கர்த்தரை விசுவாசித்து, ஆனால் நீர்*

*பிரசங்கிக்கும் விதமாக இந்த கடைசி காலச் செய்தியை விசுவாசிக்காத ஜனங்களைக் குறித்தென்ன? அவர்கள் இரட்சிக்கப்படுவார்களா? அந்த சகோதரி தன் பெயரைக் கையொப்பமிட்டிருக்கிறாள்.*

*248. ... இந்த மூன்றாம் இழுப்பு வார்த்தையை உரைத்தல். நீர் வார்த்தையை உரைப்பீரென்றால், ஒருவன் முழுவதுமாக சரீர மீட்படைந்து, உயிர்த்தெழுதலில் எடுத்துக் கொள்ளப்படுதலில் செல்வதற்கு முற்றிலும் ஆயத்தமாயிருக்க சாத்தியம் உண்டு என்பது போல் தோன்றுகிறது, மனுஷ குமாரன். இது அப்படித்தானா, இல்லையா? நீங்கள் சரியான விதத்தில் நெருக்கப்பட்டால் இதை செய்வீர்கள். "இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்பீர்கள் அல்லவா? (லூக். 21:36).*

*249. பல ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் தரிசனத்தில் இந்தியானாவரிலுள்ள காரிடன் அருகில் பெரிய அற்புதம் நடக்கும் என்று கண்டீர்களே, அது நிறைவேறி விட்டதா?*

*250. அழகுபடுத்தும் கடை ஒன்றை நான் வைத்து நடத்துவது தவறா? நான் அழகுபடுத்தும் தொழிலை செய்பவள், கிறிஸ்தவ பெண்கள் தங்கள் தலைமயிரைக் கத்தரித்துக் கொள்வதை நான் ஆதரிப்பதில்லை; நான் மற்றவர்களின் தலை மயிரைக் கத்தரித்து அதற்கு சாயமும் போடுகிறேன்.*

*251. சகோ. பிரான்ஹாமே. 1 தீமோத்தேயு 2:9ன்படி, ஒரு ஸ்திரீ மயிரைப் பின்னக்கூடாதா? 'பிராய்ட்' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு மயிரைப் பின்னுதல் (braid) என்று அர்த்தமா?*

*252. சகோ. பிரான்ஹாமே, உங்கள் ஒலிநாடாக்களில் ஒன்றில் நோவா தன் குடும்பத்தாரை இரட்சித்தான் என்று கூறியிருக்கிறீர்கள். ஒரு தாய் தன் குடும்பத்தினருக்காக அதே*

*விசுவாசம் கொள்ளலாம் என்பது அதன் அர்த்தமா? நான் விசுவாசித்தால் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் இரட்சிக்கப் படுவார்கள் என்று அர்த்தமா?*

*253. மணவாட்டிக்கு - இயேசு வருவதற்கு முன்பு மணவாட்டி, பின் மாரி காலத்திலிருந்தது போல, அற்புதங்களைச் செய்வதற்கும், மரித்தோரை உயிரோடெழுப்புவதற்கும் மற்றவைகளைச் செய்வதற்கும் பரிசுத்த ஆவியின் அனைத்து வல்லமையையும் பெற்றிருப்பாளா? அல்லது இந்த பின்மாரி 144,000 யூதர்களுக்கு மாத்திரமா? எல்லா ஊழியக்காரர்களும் இதைப் பெற்றிருப்பார்களா, அல்லது அவருடைய வருகைக்காக மட்டும் நாம் காத்திருக்கிறோமா?*

*254. ஞானஸ்நானத்துக்கு "இயேசு கிறிஸ்துவின் நாமம் சரியா, அல்லது அது "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம். என்றிருக்க வேண்டுமா?*

*255. சகோ. பிரான்ஹாமே, விவாகமும் விவாகரத்தும் என்னும் பிரச்சினையின் பேரில் இந்த நேரத்தில் எங்களுக்கு அறிவுறுத்த கர்த்தர் உமக்கு அனுமதி அளிப்பாரா? கேள்வி: ஒரு மனிதன் ஒரு ஸ்திரீயை விவாகம் செய்து கொண்ட பிறகு, அவள் அவனை விவாகரத்து செய்து விட்டு வேறொருவரை மணந்து கொள்ளலாமா? இருவருமே வேறொருவரை விவாகம் செய்து கொண்டால், அவர்கள் இருவருமே விபச்சாரம் செய்கிறவர்களாகி விடுவார்களா? இது சர்ப்பத்தின் வித்துடன் இணையும் என்று நீர் கூறினீர். அது எப்படி?*

*256. சகோ. பிரான்ஹாமே, நம்முடன் வேற்றுமை கொண்டிருக்கும், மற்ற சபைகளுக்கு நாம் போகலாமா?*

*257. அன்புள்ள சகோ. பிரான்ஹாமே, பரிசுத்த ஆவி உள்ள அனைவரையும் அடையாளங்கள் தொடர வேண்டு மென்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?*

***258. நான் ஒரு தொழிற்சங்க உறுப்பினன். ஒரு கிறிஸ்தவன் அதில் சேர்ந்திருப்பது தவறா? "சத்தியம் பண்ணாதே" என்று வார்த்தை உரைக்கிறது. தொழிற்சங்கத்தின் சட்டப்பிரமாணத்தை கடைபிடிப்போமென்று நாங்கள் ஆணையிட வேண்டும். நான் கிறிஸ்தவனான முதற்கொண்டு, நான் தீவிரமாக அதில் ஈடுபடவில்லை, ஆனால் என் சந்தாவை இப்பொழுதும் செலுத்திக் கொண்டு வருகிறேன்,***

***259. யூதாஸ்காரியோத்தின் பெயர் ஆட்டுக்குட்டியான வரின் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கப்பட்டதா? அது ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் முதற்கண் இடம் பெற்றிருந்ததா?***

***260. வெளிப்படுத்தின விசேஷம் 20:4ல் குறிக்கப் பட்டுள்ள கூட்டத்தினர் யாரென்று தயவுகூர்ந்து விளக்கு வீர்களா? அவர்கள் முன் காலத்தில் இருந்த மணவாட்டியின் பாகமா, அல்லது வருங் காலத்தில் உள்ளவர்களா?***

***261. நீங்கள் தயவுகூர்ந்து*** *(நல்லது. இதுவும் சரியாக அதே கேள்வி தான்)...* ***வெளிப்படுத்தின விசேஷம் 20:4, இவர்கள் மிருகத்தையாவது, அதின் சொரூபத்தையாவது வணங்காமல் அவனுடைய முத்திரையைத் தரித்துக் கொள்ளாமல், இயேசுவைப் பற்றிய சாட்சியினிமித்தம் சிரச்சேதம் பண்ணப் பட்ட ஆத்துமாக்களா? (ஓ, அவர்கள் எதைக் குறிப்பிடுகிறார்கள் என்பதை நான் காண்கிறேன். இப்பொழுது தான் இது என்னிடம் கொடுக்கப்பட்டது, என் கையில் கொடுக்கப்பட்டது).... அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள் என்று கூறப்பட்டுள்ளதே. துன்புறுத்தப்படுவது மணவாட்டி என்பதால் இது குழப்பமாக உள்ளது. இல்லை யென்றால், வேறு யார் கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருஷம் அரசாள முடியும்? இவர்கள் 144,000 பேர்களாக இருக்கக் கூடுமா?***

***262. அவருக்கு நான் என்ன செய்ய வேண்டும்? பண்ணையில் தந்தைக்கு தொடர்ந்து*** *(ஓ!)* ***உதவி செய்ய வேண்டுமா? என் ஜீவனத்துக்கு நான் என்ன செய்வேன்..? அவன் தன் பெயரைக் கையொப்பமிட்டுள்ளான்.***

***263. காயீன் சர்ப்பத்தின் வித்து என்று நீங்கள் கூறினீர்கள். அப்படியென்றால் ஏவாள், "கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன்" என்று கூறக் காரணம் என்ன?***

***264. அன்புள்ள சகோ. பிரான்ஹாமே. "கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடி வருவார்கள்' என்று ஏசாயா 2:2ல் கூறப்பட்டுள்ள வசனத்தை எனக்கு விளக்குவீர்களா?***

***265. சகோ. பிரான்ஹாமே... (இது என்னவென்று பார்ப்போம்) சகோ. பிரான்ஹாமே, உமது செய்தியைப் பின் பற்றுபவர்கள், நீரே இந்நாளின் மேசியா என்று பொதுவாக விசுவாசிக்கின்றனர். அது அப்படித்தானா?***

***266. இரண்டாம் கேள்வி: முதல் முறை நீர் அரிசோனாவுக்குச் சென்ற நோக்கத்தை எங்களிடம் கூறினீர். ஏனென்று எங்களிடம் கூறினீர், அது நிறைவேறினது, நீர் மறுபடியும் ஏன் அங்கு சென்றீர் என்பதை எங்களுக்குத் தெரிவிக்கவில்லை.***

***267. சகோ.பிரான்ஹாமே, உங்களிடம் கேட்க விரும்பும் சில கேள்விகள் எனக்குண்டு. எல்லாவற்றையும் விற்க நீர் ஜனங்களுக்கு ஆலோசனை கூறினதாக ... ஜனங்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்...*** *(அதையும் நான் தனியே விட்டு விடுவது நலமாயிருக்கும். நாம் பார்ப்போம். நல்லது, முடிக்க வேண்டிய நேரம் ஏற்கனவே கடந்து விட்டது. பகல் உணவுக்குப் பிறகு இதை நாம் பார்ப்போம். இதற்கு நான் பதிலளிக்கிறேன், அல்லது என்னால் முடிந்த வரையில்*

*இதற்கு பதிலளிக்க முயல்கிறேன். எனக்குத் தெரியாது; இது இப்பொழுது தான் என் கையில் கொடுக்கப்பட்டது. பாருங்கள்? பில்லி சில கேள்விகளை கதவண்டையில் என்னிடம் கொடுத்தான். பாருங்கள்?)* ***ஜனங்கள் தங்கள் வீடுகள் அனைத் தையும் விற்று உம்மை அரிசோனாவுக்குப் பின் தொடரவேண்டுமென்றும், இல்லையென்றால் அவர்கள் எடுத்துக் கொள்ளப்படுதலில் போகமாட்டார்கள் என்றும் நீர் ஆலோசனைக் கூறினதாக ஜனங்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். இது உண்மையா?***

***268. மேலும், நான் கேள்விப்பட்டது, அநேக ஆண்டுகளுக்கு முன்பு ஜீவ அப்பத்தைக் குறித்து நீர் எழுதின ஒரு புத்தகத்தின் பேரில் ஒரு போதகம் பரவியுள்ளது... அதாவது, நாங்கள் எல்லோரும் உம்முடன் இருக்க வேண்டுமென்றும், இல்லையென்றால் நாங்கள் எடுத்தக் கொள்ளப்படுதலை இழந்து விடுவோம் என்றும் அவர்கள் அதை வியாக்கியானம் செய்கின்றனர்.***

***269. மேலும் விற்று அரிசோனாவிலுள்ள சியரா விஸ்டாவில் குடியேறின குடும்பங்கள், "சிறு பெத்லகேம்" என்னும் தலைப்பு கொண்ட உம்முடைய ஒலிநாடாவிலிருந்து, எடுத்துக் கொள்ளப்படுதல் அரிசோனாவில் நிகழும் என்று ஊகித்துக் கொண்டனராம். அங்கு செல்ல அவர்களுக்கு நீர் ஆலோசனை கூறினீரா?***

***270. சகோ. பிரான்ஹாமே, நாங்கள் ஏதாவதொன்றை இழந்து விட்டிருக்கிறோமா? நீர் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் உண்மையென்று நம்புவதாக இந்த ஜனங்கள் உரிமை கோருகின்றனர்' (ஆனால் அவர்கள் அவ்விதம் செய்வதில்லை! அவர்கள் நம்புவதில்லை. அவர்களுடைய செய்கைகள் அவர்கள் நம்புவதில்லை என்பதைக் காண்பிக்கிறது). இந்தக் காரியங்களைக் குறித்து ஆமாம். அல்லது இல்லை என்னும் உம்முடைய நேரடியான விடையை நான் அறிய விரும்புகிறேன் (நீர் பெற்றுக்***

*கொள்வீர்! சரி). அது உண்மையானால், நாங்கள் ஆயத்தமாகி அங்குள்ள மற்றவர்களுடன் சேர்ந்து கொள்ள விரும்புகிறோம். இந்த கேள்விகளுக்கான உம்முடைய விடைகளுக்காக உமக்கு நன்றி, கர்த்தருடைய வருகை தாமதிக்குமானால், இந்த ஞாயிறன்று இந்த விடைகளைக் கேட்பதற்காக காத்திருப்பேன்.*

*271. இது... (எனக்குத் தெரியவில்லை. பாருங்கள், இது வித்தியாசமாயுள்ளது - இது மற்ற கேள்விகளைக் காட்டிலும் வித்தியாசமான கையெழுத்தைக் கொண்டுள்ளது. உங்களுக்கு காண்பிக்க இது போன்ற எட்டு அல்லது பத்து கேள்விகள் உள்ளன என்று எண்ணுகிறேன். பாருங்கள்?) மிகவும் பரிபூரணமான சபை அரிசோனாவிலுள்ள டூசானில் இருக்கப் போகின்றதா? நான் தேவனுடைய பரிபூரண சித்தத்தில் இருக்க விரும்புகிறேன். நாங்கள் டூசானுக்கு வந்துவிடலாமா?*

*272. சகோ. பிரான்ஹாமே, தயவுகூர்ந்து... (இதைப் பார்ப்போம்) நாம் வாழும் இந்நேரத்துக்கான தீர்க்கதரிசி நீர் என்பதை அறிந்துள்ளோம் (அதுதான் அது). தேவனுடைய மக்கள் உம்முடன் அரிசோனாவுக்கு ஓடிப்போக வேண்டிய நேரம் ஒன்று வருமா? அப்படியானால், அந்த நேரம் வரும்போது எங்களுக்குத் தெரிவிப்பீரா?*

*273. சகோ.பிரான்ஹாமே... (இது வேறொன்று. முற்றிலும் வித்தியாசப்பட்டது). சகோ. பிரான்ஹாமே, "மணவாட்டி மற்றும் மணவாளனின் வருங்கால இருப்பிடம் என்னும் செய்தியில் அந்த இடம் கூடாரத்திலிருந்து ஆயிரத்தைந்நூறு மைல்கள் இருக்குமென்றும், அது ஒவ்வொரு பக்கமும் எழுநூறு மைல் கொண்ட சதுரமாயிருக்கும் என்றும் நீர் சொன்னதாக சிலர் புரிந்து கொண்டுள்ளனர்* (வேறு விதமாகக் கூறினால், நடுவில் உள்ள கூடாரம், ஒவ்வொரு பக்கமும் எழு நூறு மைல்கள்

இருக்கும் - ஆயிரத்தந்நூறு மைல்கள். ஓ!). **அது உண்மையா? நான் இந்த இடத்துக்கு வெளியே வாழ்கிறேன். அதற்குள்ளே நான் வந்து விட வேண்டும்.)**

*274.* **அன்புள்ள சகோ. பிரான்ஹாமே, என் மனைவியும் நானும் பிரிந்து விட்டோம். அவள் என் மேல் விவாகரத்து வழக்கு தொடுத்திருக்கிறாள். அவள் கிறிஸ்தவள் அல்ல. நான் செய்தியை விசுவாசிக்கிறேன், அவள் இரட்சிக்கப்பட்டு விசுவாசிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்** (அது இனிமையானது அல்லவா? அது தான் உண்மையான கிறிஸ்தவ மனப்பான்மை. பாருங்கள்?) **நான் என்ன செய்ய வேண்டும்? எங்களுக்கு இரண்டு பையன்கள் இருக்கின்றனர்** (பெயரைக் கையொப்ப மிட்டுள்ளார்).

*275.* **சகோ. பிரான்ஹாமே, ஜனங்கள் அரிசோனாவில் குடியேற வேண்டுமாமே (ஓ; மறுபடியும்!), இதெல்லாம் என்ன? இதை விளக்குங்கள். இது வேறு விதமான கையெழுத்து. பாருங்கள், பாருங்கள்?**

*276.* **சகோ. பிரான்ஹாமே, ஆதி அப்போஸ்தல திருச்சபையைப் போல, மணவாட்டி உபத்திரவத்தின் வழியாக கடந்து செல்வாளா?**

*277.* **எந்தவிதமான குடும்பக் கட்டுப்பாட்டு முறையையும் கையாளுவது நியாயமா?**

*278.* **சகோ. பிரான்ஹாமே, நான்... (கூடுமானால் இன்னும் மூன்று நிமிடங்கள் மட்டுமே எடுத்துக் கொள்வேன். சிறியது ஏதாவதொன்றை நான் எடுத்துக் கொள்கிறேன்). என்னை இயேசுவுக்கு முழுவதுமாக ஒப்புக்கொடுக்க இயலவில்லை: எனக்குப் பொல்லாத ஆவி உள்ளதா?**

***

# *64-08-23E COD #21*

***279.** இப்பொழுது, இக்குவியலிலிருந்து நான் கையிலெடுத்த முதலாம் கேள்வி: சகோ. பிரான்ஹாமே, ஒரு கிறிஸ்தவள் தன் தலைமயிரைச் சுருள வைக்கும் 'பின்'களை (pin curls) போட்டுக் கொள்வது தவறா? மேலும், அவளுடைய உடையின் கைகள் (sleeves) எவ்வளவு நீளம் இருக்க வேண்டும்? நன்றி. ஒரு சகோதரி.*

***280.** மிகவும் அவசரம், சகோ. பிரான்ஹாமே, காலம் முடிவடைந்து நித்தியம் துவங்குகிறது என்று அறிந்திருப்பதனால், விவாகம் செய்யத் திட்டமிட்டிருக்கும் ஒரு தம்பதிகளுக்கு உங்கள் ஆலோசனை என்ன?*

***281.** அன்புள்ள சகோ. பிரான்ஹாமே, நான் இயேசுவின்' நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறேன். அப்படியானால் நீங்கள் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று வார்த்தை உரைக்கிறது. அது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறிக்கிறதா, அல்லது அந்த - அபிஷேகத்துடன் நான் ஒரு நிச்சயமான அனுபவத்தைப் பெற வேண்டும் என்பது அதன் அர்த்தமா? நான் பரிசுத்த ஆவியினால் நிறையப்பட வேண்டுமென்று மிகவும் விசாரமுள்ளவனாயிருக் கிறேன். இந்த நீண்ட குறிப்புக்காக என்னை மன்னிக்கவும், இந்தக் கேள்வியை உங்களிடம்கேட்க வேண்டுமென்று நான் நீண்ட காலமாய் காத்திருக்கிறேன். நன்றி.*

***282.** சகோ. பிரான்ஹாமே... (அந்த கேள்விக்கு பதில் கூறி முடித்து விட்டேனா? பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறித்து நான் கூறினேனா?...*

*283. சகோ. பிரான்ஹாமே: கேள்விகள்: ஒரு கிறிஸ்தவ பெண்மணி சாதாரண ஆபரணங்களை, கழுத்து மாலையாக அல்லது முத்துக்களை அணிந்து கொள்ளலாமா?*

*284. கேள்வி: சகோ. பிரான்ஹாமே, பூமி வெடித்து எரியும் போது, மணவாட்டி எங்கிருப்பாள்? வாதைகள் விழுந்த போது, இஸ்ரவேல் புத்திரர் இருந்த கோசேன் நாட்டைப் போல் அது ஒரு இடமாக இருக்குமா? அது நடக்கும் போது மணவாட்டி பூமியில் இருப்பாளா? அப்படியானால், அவள் எங்கிருப்பாள்?. எடுத்துக் கொள்ளப்படுதல் நிகழும் நேரத்தில் மணவாட்டி அனைவரும் ஒரே இடத்தில் இருப்பார்களா?*

*285. மேலும், சகோ.பிரான்ஹாமே, ஒரு ஸ்திரீ தன் புருஷனுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்பதை நான் விசுவாசிக்கிறேன். ஆனால் கிறிஸ்தவ ஸ்திரீ ஒருத்திக்கு, உங்கள் ஆராதனைகள் ஒன்றுக்கும் கூடவராத பாவியான புருஷன் ஒருவன் இருந்து, அவன் மனைவியிடம் தலை மயிரைக் கத்தரித்துக் கொள்ளவும், குட்டை கால் சட்டை அணிந்து கொள்ளவும், தேவ பக்தியற்ற இடங்களுக்கு செல்லவும் கட்டாயப்படுத்தினால், அந்த ஸ்திரீ இந்த மனிதனுக்கு அவ்வழியில் கட்டுப்பட்டிருக்க வேண்டுமா? தயவுகூர்ந்து இதை இன்னும் தெளிவாக விளக்குங்கள், ஏனெனில் இது அடிக்கடி கேட்கப்படுகின்ற ஒரு கேள்வியாகும்.*

*286. சகோ.பிரான்ஹாமே, (நாம் பார்ப்போம்)... விவாகரத்து செய்யப்பட்ட துணைவி உயிரோடிருக்கையில், செய்திக்கு வருவதற்குமுன்பு மறுவிவாகம் செய்து கொண்ட ஒரு நபர் ஊழியம் செய்வது முறையாகுமா?*

*287. அன்புள்ள சகோ. பிரான்ஹாமே, ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு முன்பு தேவன் என்னைச் சந்தித்து அன்பின் வரம் என்னவென்பதை எனக்கு வெளிப்படுத்தினார். அன்று முதல் அதற்கு நான் திரும்ப வேண்டும் என்பதே என்*

*ஜெபமாயுள்ளது. நான் மரிக்கும் முன்பு அதைப் பெற்றுக் கொள்வேனா? என் கணவர் வார்த்தைக்கு செவிகொடுப்பாரா, நான் என்ன செய்ய வேண்டும்?*

*288.* **இது ஞாயிறு ஆராதனைகளுக்காக.** *ஒரு ஸ்திரீ ஒரு தவறைச் செய்து... (இப்பொழுது, ஒரு நிமிடம் பொறுங்கள்; இதை நான் முதலில் படிக்கட்டும். பாருங்கள்? (சகோ.பிரான்ஹாம் தனக்குள் அந்த கேள்வியைப் படிக்கிறார் - ஆசி) சரி, அது பரவாயில்லை). ஒரு ஸ்திரீ விவாகமான ஒரு மனிதனுடன் ஒரு தவறைச் செய்து, மனந்திரும்பி, வேதத்தின்படி தன் கணவருடன் அதை சரி செய்து கொண்டு விட்டபிறகு, அவள் ஈடுபட்ட அந்த மனிதனின் மனைவிக்கு இதைக் குறித்து ஒன்றும் அறியாமலிருந்தாலும், அவளிடம் சொல்ல வேண்டியது அவசியமா? அல்லது அந்த மனிதன் அவளிடம் முதலில் சொல்ல வேண்டுமா? அல்லது அவளைப் புண்படுத்துவது அவசியம்தானா? இது நடந்து முடிந்தபிறகு, நட்புத் தன்மை ஈடுபட்டுள்ள இவ்விஷயத்தில் எவ்வளவு தூரம் நாம் சென்று இதை சரி செய்து கொள்ள வேண்டும்?*

*289.* **ஞாயிறு காலைக்கு கேள்வி:** *(வருந்துகிறேன், இதை இந்த நேரத்தில்தான் பார்க்க முடிகிறது, ஆனால்...) பரிசுத்த ஆவியைப் பெறும் நேரத்தில், அதாவது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறுகையில், ஏதாகிலும் வித்தியாசம் உண்டாகின்றதா? ஒரு நபர் அந்நிய பாஷையில் பேசுகின்றாரா? அப்படி எப்பொழுதும் இல்லாமல் போனால், வேறெந்த அடையாளம் காணப்படுகிறது?*

*290. சகோ.பிரான்ஹாமே, நாங்கள் என்ன செய்வோம்? ஏதோ ஒன்று என் மேல் தங்கியுள்ளது, அதிலிருந்து விடுபட என்னால் முடியவில்லை. போன இலையுதிர்காலத்தின் போது, நான் வெள்ளை மணலில் காணாமற் போனதாக கனவு கண்டேன். அப்பொழுது இருளாகிக் கொண்டிருந்தது. என்னால் என் வழியைக் கண்டு பிடிக்க முடியவில்லை.*

*சென்ற இலையுதிர் காலம் முதற்கொண்டு அந்த கனவு எனக்கு உண்டாகிக் கொண்டேயிருக்கிறது. இப்பொழுது நான் இருளில் தடுமாறும் ஒருவனைப் போல் இருக்கிறேன். என் மகன் எர்வினும் என்மனைவியும் என் கனவில் இருந்தனர் அவர்களும் இருளில் இருக்கின்றனர். நாங்கள் பதற்றமுற்றிருக்கிறோம். எங்கள் இருதயங்களில் என்ன உள்ளதென்று தேவன் உமக்குக் காண்பிப்பார் என்று விசுவாசிக்கிறோம். (திருமதி... ஓ, சரிதான்). நாங்கள் தவறாகவோ அல்லது பாவம் செய்கிறவர்களாகவோ இருப்போமானால், தயவு கூர்ந்து எங்களுக்குத் தெரியப்படுத்தவும். நாங்கள் சரியாக இருக்க விரும்புகிறோம்.*

*291. சிலர் சகோ.பிரான்ஹாம் மனுஷகுமாரன் என்கின்றனர். என் கருத்தின்படி அக்கினி ஸ்தம்பமே மனுஷ குமாரன். நான் தவறா?*

*292. சகோ. பிரான்ஹாமே, பரிசுத்த ஆவியைக் கொண்டுள்ள ஒரு நபரில், சாத்தான் பாஷைகள் பேசும் வரம் அல்லது தீர்க்கதரிசன வரத்தை உபயோகிக்க முடியுமா?*

*293. தானியேல் அக்காலத்து தீர்க்கதரிசியாயிருந்தபடியால் அக்கினி சூளையில் காணப்பட்ட நாலாம் ஆள் தானியேலா?*

*294. சகோ.பிரான்ஹாமே, ஆதியாகமம் 6ம் அதிகாரம் 12ம் வசனத்தில், மாம்சமான யாவரும் தங்கள் வழியைக் கெடுத்துக் கொண்டிருந்ததாக தேவன் உரைத்தார். அது விவாகரத்தையும் விவாகத்தையும் குறிப்பிடுகின்றதா? அப்படியானால், இயேசு மத்தேயு 24ம் அதிகாரம் 38ம், 39ம் வசனங்களில், "நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வெளிப்படும் காலத்திலும் நடக்கும்" என்று உரைத்த போது, இயேசு அதே காரியத்தைத் தான் குறிப்பிட்டார் அல்லவா?*

*295. சகோ.பிரான்ஹாமே, ஆயிரம் வருட அரசாட்சியின் போது, பூமியில் கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சியின் போது, குழந்தைகள் பிறக்குமா? அந்த காலத்தில் பூமியில் பாவம் உண்டாயிருக்குமா? அந்த காலத்தில் பூமியில் மனித சரீரங்களில் ஜனங்கள் இருப்பார்களா?*

*296. சகோ.பிரான்ஹாமே, இயேசு மத்தேயு 12ம் அதிகாரம், 32ம் வசனத்தில், "எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை'என்று கூறியுள்ளதன் அர்த்தம் என்ன? இந்த வேத வசனத்தை எனக்கு தயவுகூர்ந்து விளக்கித் தரவும். நன்றி. அந்த மனிதனின் பெயரை அது கொண்டுள்ளது; அவர் ஒரு ஊழியக்காரர். சரி.*

*297. சகோ.பிரான்ஹாமே, இளம் விவாகமாகாதவர் (அது யாரென்று குறிப்பிடவில்லை) தங்கள் தலைமயிரைக் கத்தரித்துக் கொள்வது தவறா? அது ஒரு ஸ்திரீயென்று நினைக்கிறேன்.*

*298. சகோ.பிரான்ஹாமே, ஸ்திரிகளுக்கு ஆரோக்கியமான கணவனும் பிள்ளைகளும் இருந்தால், அவர்கள் பொது ஜன அலுவலகங்களில் பணிபுரிய அனுமதியுண்டா? இந்தக் கேள்வியை நான் வேறொருவருக்காக கேட்கிறேன்.*

*299. இயேசு இரண்டாம்... (இல்லை!) இயேசு - நீங்கள் இரண்டாம் விவாகத்தில் ஈடுபட்டிருந்து அதில் இருவரும் ஏற்கனவே விவாகரத்து செய்து கொண்டவர்களாக இருப்பார்களானால், அதற்காக வருந்தி மனந்திரும்புதல் மட்டும் போதுமா, அல்லது அதைச் சரிசெய்து கொள்ள இந்த விவாகத்தையும் முறித்துக் கொள்ள வேண்டுமா?*

*300. நாங்கள் காண்கிறோம். எங்களால் ஏன் எங்கள் வீட்டை விற்க முடியவில்லை- நன்றி. நாங்கள்... குறிப்பு:*

*அதை விற்க நாங்கள் ஜெபித்து உபவாசித்தோம். இதுவரை பயனில்லை.*

*301. சகோ.பிரான்ஹாமே, ஒரு ஸ்திரீ தன்தலைமயிரை சுருள வைத்துக் கொள்வது தவறா?*

*302. தயவு செய்து 1 கொரிந்தியர் 13:8-12 வசனங்களை விளக்கவும். தற்பொழுது சபைக்கு பரிபூரண வார்த்தை திரும்ப அளிக்கப்பட்டு விட்டதால், இந்த வேத வசனங்கள் நிறைவேறி. விட்டனவா?*

*303. சகோ. பிரான்ஹாமே, மேல் தட்டை தலை மயிர் கத்தரிப்பு (Flattop hair cut) செய்து கெள்வது தவறா?*

*304. சகோ.பிரான்ஹாமே, ஏசாயா சீயோன் குமாரத்திகளிடம் பேசின போது... (அது, "சீயோன் குமாரத்திகளைக் குறித்து" என்று இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்)... குப்பிகளையும், மார்ச் சுருளுக்குப் பதிலாக மொட்டையும் என்று சீயோன் குமாரத்திகளைக் குறித்து சொன்னவை... இந்நாளுக்குப் பொருந்துமா அல்லது சிலர் கூறுவது போன்று பழைய வேதாகமம் தற்காலத்திற்கு பொருந்தாதா?*

*305. சகோ. பிரான்ஹாமே, ஸ்திரிகள் எவ்விதம் (ஓ, என்னே!) தங்கள் தலைமயிரை அணிந்து கொள்ள வேண்டும்?*

*306. மணவாட்டி எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு, புத்தியில்லாத கன்னிகை எவராகிலும் இரட்சிக்கப்படுவார்களா, அல்லது எல்லோருமே இழக்கப்படுவார்களா?*

*307. ஒருவன் தனிப்பட்ட நபர் ஒருவருக்கு தசமபாகம் செலுத்த வேண்டுமா, அல்லது கிறிஸ்தவன் வேலை செய்ய வேண்டுமா?*

*308. அன்புள்ள சகோ. பிரான்ஹாமே, விவாகமாகாமல் ஒரு குழந்தை பிறந்தால், அது இரட்சிக்கப்படக் கூடுமா, அல்லது எடுத்துக் கொள்ளப்படுதலில் செல்ல முடியுமா?*

*309. சகோ. . பிரான்ஹாமே, கூடுமான வரையிலும் உமது செய்திக்கு நாங்கள் நெருங்கியிருக்க விரும்புகிறோம். நாங்கள் அரிசோனா அல்லது ஜெபர்ஸன்வில்லுக்கு குடி புகலாமா?*

*310. சகோ. பிரான்ஹாமே, பாவிகளுக்கு இனி பிரசங்கிப்பதற்கு இப்பொழுது நேரம் மிகவும் தாமதமாகி விட்டதா?*

*311. கேள்வி எண் 2: இரட்சிக்கப்பட்டவர்கள் பாவிகளிலிருந்து ஆராதனையில் தங்களை பிரித்துக் கொள்ள வேண்டுமா?*

*312. இரட்சிக்கப்பட்ட ஒரு மனைவி தன் கணவர் பாவியாயிருந்தால் அவர் அணுகினால் மறுக்க வேண்டுமா?*

*313. "சகோ. பிரான்ஹாமே, 'ஆனல்மெண்ட்' என்னும் சொல்லின் பொருள் என்ன? ஜனங்கள் விவாகம் செய்து கொள்ள சுயாதனம் பெறுகின்றனரா? அல்லது இது விவாகரத்தைக் குறிக்கும் மற்றொரு சொல்லா? இதன் பேரில் சில தகவல் அறிய விரும்புகிறேன்.'*

*314. சிறை ஆராதனைகளுக்கும், ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கென சாட்சி கூறும் ஊழியத்துக்கும் மிகவும் கால தாமதமாகி விட்டதா? மேலும், கர்த்தர் சீக்கிரம் வரப் போவதனால், ஒருவர் தனக்கு இப்பொழுதுள்ள எல்லாவற்றையும் விற்று விட வேண்டுமா?*

*315. சகோ. பிரான்ஹாமே, மத்.12:40ல், "யோனா இரவும் பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷ குமாரனும் இரவும் பகலும், மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்" என்று கூறப்பட்டுள்ளதே,*

*அப்படியிருக்க, அவர் கல்லறையில் வெள்ளிக்கிழமை மாலையில் வைக்கப்பட்டு ஞாயிறு காலையில் உயிர்த்தெழுந்தார் என்று அவர்கள் எப்படி கூற முடியும்? அந்த கணக்குப்படி இரண்டு இரவுகளும் ஒரு பகலும் தான் ஆகின்றதே?*

*316. சகோ. பிரான்ஹாமே, ஒரு மனிதனுக்கு விவாகமாகியிருந்து விவாகரத்து செய்திருந்தால் (அது பயங்கரமான செயல் இல்லையா (பாருங்கள்), எத்தனையோ பேர்? இப்பொழுது, நான் மக்களுக்கு விரோதமாக எதையும் கூறவில்லை; இதுவே ஜனங்களின் மனதில் உள்ளது. நிச்சயமாக, அவர்கள் கலக்கமுற்றிருக்கின்றனர். முன்பெல்லாம் ஜனங்கள் எடுத்து கொள்ளப்படுதல் குறித்து அதிகம் சிந்திப்பதில்லை; அது முக்கியமாக காணப்படவில்லை. ஆனால் இப்பொழுதோ அது உலகம் முழுவதிலும் பரவி விட்டது. ஜனங்கள் வேதாகமத்தில் இதைக் குறித்து படிக்கின்றனர். அங்குள்ள தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் அது என்னவென்று காண வருகின்றனர். அவர்கள் அதை அறிந்து கொள்கின்றனர், அவர்கள் உத்தமமாயுள்ளனர். அவர்கள் அறிந்து கொள்ள விரும்புகின்றனர். ஆகையால்தான் இதைக் குறித்து மிகுந்த ஞானத்தோடு உங்களுக்கு பதிலளிக்க விரும்புகிறேன்). விவாகமாகியிருந்து விவாகரத்து செய்து விட்டு, அதன்பிறகு ஏற்கனவே விவாகமாகி விவாகரத்து செய்திருந்த ஒருத்தியை மறுபடியும் விவாகம் செய்திருந்தால், இவ்விருவரும் கர்த்தருடைய பார்வையில் விவாகம் செய்தவர்களாக எண்ணப்படுவார்களா? எப்படி இவ்விருவர் அல்லது இவர்களில் ஒருவர் எடுத்துக் கொள்ளப்படுதலில் செல்ல முடியும்?*

*317. மறுபடியும் பிறந்த எல்லா விசுவாசிகளும் எடுத்துக் கொள்ளப்படுதலில் செல்வார்களா?*

***318. ஒருவர் உண்மையில் பரிசுத்த ஆவியினால் நிறையப்பட்டிருக்கிறார் என்பதற்கு அத்தாட்சி என்ன?***

***319. சகோ. பிரான்ஹாமே, ஒரு வாலிபப் பிள்ளை ஸ்லாக்கு களையும் குட்டை கால் சட்டையும் அணிவது சரியா?***

***320. நாங்கள் எங்கே ஒன்று கூட வேண்டும்? நாங்கள் எக்காளங்களின் போது ஒன்றுகூட வேண்டுமென்று நீர் சொன்னீர்.***

***321. சகோ. பிரான்ஹாமே, உங்களுக்கு நேரமிருந்தால் மத். 10:41ஐ தயவு கூர்ந்து விளக்கவும். தீர்க்கதரிசிக்கேற்ற பலன் என்னவென்று அறிய விரும்புகிறேன்.***

***322. சகோ.பிரான்ஹாமே, நான் ஆயிரம் வருட அரசாட்சியைக் குறித்து அறிய விரும்புகிறேன். அது கலியாண விருந்துக்குப் பிறகா அல்லது அது பூமியில் இருக்குமா? இவையெல்லாவற்றையும் குறித்து என்னால் அதை புரிந்து கொள்ள இயலவில்லை.***

***323. இது ஒரு... நான் பகல் உணவு விடுதி ஒன்றை நடத்தி பெரும்பாலும் உயர்நிலைபள்ளி மாணாக்கர்களுக்கு உணவு வழங்குகிறேன். நான் வெளிச்சத்துக்கு வந்த முதற்கு, நான் 'பின் பால் மெஷினை'யும், 'ஜூக் பாக்ஸை'யும் அகற்றி விட்டேன் (அவர்களிடமிருந்த ஜூக்பாக்ஸ்). இளைஞர்கள் புகை பிடித்து, வானொலியில் 'ராக் அண்டு ரோல்' இசையை கேட்க விரும்புகின்றனர். நான் ஒரு நாளுக்கு நான்கு மணி நேரம் மட்டுமே திறந்து வைக்கிறேன். நான் புகை பிடிப்பதையும் குடிப்பதையும் ஆதரிப்பதில்லை, ஆனால் அந்த இடத்தில் வைத்திருப்பதைக் குறித்து நான் கவலையடைந்துள்ளேன்.***

*324. சபைக்குள் செல்வதற்கு வரிசையில் நிற்பது ஞாபகார்த்தமாக மட்டுமே இருக்குமானால், நாம் உபத்திரவ காலத்தின் வழியாக பிரவேசிக்காமல் போனால், என்ன நடக்கும்? நாம் சில கஷ்டங்களை காண வேண்டுமா?*

***

# *64-08-30M COD #22*

*325. மணவாட்டியில் செல்லுகின்ற அனைவருமே கூடாரத்தின் ஆயிரத்து ஐந்நூறு மைல்கள் பரப்புக்குள் வாழ வேண்டுமா* (இதற்கு சென்ற ஞாயிறு நான் விடை கூறினேன் என்று நினைக்கிறேன். இவைகளைப் பொறுக்கியெடுத்து என்னால் முடிந்த வரையில் உபயோகிக்க வேண்டும்)... *"மணவாட்டியின் வருங்கால இருப்பிடம்" என்னும் செய்தியின் இரண்டாம் ஒலிநாடாவில் தொனிப்பது போல் ஆயிரத்து ஐந்நூறு மைல்கள் பரப்புக்குள் வாழ வேண்டுமா? எடுத்துக் கொள்ளப்படுதலின் போது மணவாட்டி உலகின் எல்லா பாகங்களிலிருந்து வருவாள் என்று நான் எப்பொழுதும் எண்ணியிருந்தேன். நான் தவறா?*

*326. சகோபிரான்ஹாமே ., நான் கர்த்தரை நேசிக்கிறேன், ஆனால் கடந்த ஆண்டில் ஒரு பிரச்சினையை நான் சந்திக்க நேர்ந்தது, சில நேரங்களில், எனக்கு ஏறக்குறைய மனநிலைக் கோளாறு ஏற்பட்டு விட்டதோ என்பது போல் தோன்றுகிறதுஅது என்ன .? தயவு செய்து எனக்காவும் என் கணவருக்காகவும் ஜெபிக்கவும்.*

*327. இப்பொழுது. விவாகரத்துக்குப் பிறகு மறுபடியும் விவாகம் செய்து கொள்ள வேதத்தின்படி அனுமதி வழங்கும் ஏதாகிலும் ஒரு நிலைமையுண்டா?* (இப்பொழுது இது

*என்ன வென்று பார்க்கலாம்... - இதில் இரண்டு மூன்று கேள்விகள் அடங்கியுள்ளன என்று நினைக்கிறேன்).* ***முன்பு விவாகமாகியிருந்து, இப்பொழுது விவாகமான நிலையில் இல்லாமல் இருந்தால், மீண்டும் விவாகம் செய்து கொள்வதற்கென அனுமதி வழங்கும் விவாக ரத்துக்கான ஆதாரம் ஏதாகிலும் உண்டா ? இதற்கான விடையைப் பெற நான் ஒலிநாடாவை வாங்கிக் கொள்வேன். மிக்க நன்றி. ஞாயிறன்று இதை எதிர்பார்ப்பேன்.***

***328. அன்புள்ள சகோ. பிரான்ஹாமே, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்ட ஒருவருக்கு அடையாளங்கள் தொடராமல் இருப்பது சாத்தியமா? அல்லது நாம் வருங்காலத்தில் ஆவியானவர் நியமித்துள்ள சூழ்நிலைகளுக்காக காத்திருக்க வேண்டுமா?***

***329. தயவு கூர்ந்து விளங்குங்கள். சகோ.பிரான்ஹாம் ஒரு மனிதனைக் காட்டிலும் மேலானவர் என்றும், அவரால் சிருஷ்டிக்க முடியும் என்றும், இயேசு காண்பதற்கு சகோ.பிரான்ஹாமைப் போலவே இருக்க வகையுண்டு என்றும் ஜனங்கள் கூறுகின்றனர்.***

***330. சகோ.பிரான்ஹாமே, நான் வார்த்தையில் நிலை நின்று, அதே சமயத்தில் என் மனைவிக்காக நான் உண்மையில் அக்கறை கொண்டிருக்கிறேன் என்பதை எவ்வாறு அவளுக்குக் காண்பிக்க முடியும்? ஏனெனில் "நீ விசுவாசிப்பதை அல்லது பிரசங்கிப்பதை ஏன் செயல்படுத்தக் கூடாது?" என்னும் கேள்வி எழுந்துள்ளது.***

***331. சகோ. பிரான்ஹாமே, மணவாட்டி எந்த சபைக்கும் செல்லக்கூடாது, நீர் அங்கு பிரசங்கம் பண்ணினாலொழிய, அல்லது இந்த கூடாரத்திற்கு மட்டும் வரலாம் என்று நீர் போதிக்கிறீரா?***

***332. மேலும், வேலை செய்தல், மீன் பிடித்தல் போன்ற விஷயத்தில் நாம் ஞாயிற்றுக்கிழமையையும்***

***விடுமுறைகளையும் ஆசரிக்க வேண்டிய அவசியமில்லை என்று நீர் போதிக்கிறாரா? (அது ஞாயிற்றுக்கிழமை என்பது போல் தான் காணப்படுகிறது. கீழ் பாகத்தில் - அது ஞாயிற்றுக்கிழமை. அது விடுமுறைகள் அல்லது ஞாயிற்றுக்கிழமைகள் என்று நினைக்கிறேன். ஆம், ஞாயிற்றுக் கிழமைகள், அப்படித்தானே அது காணப்படுகிறது?*** *(சகோ. பிரான்ஹாம் யாரோ ஒருவரிம் பேசுகிறார் - ஆசி]. பரிசுத்த நாட்கள், ஞாயிற்றுக்கிழமையும், பரிசுத்த நாட்களும்).*

*333.* ***சகோ. பிரான்ஹாமே, நான் பரிசுத்த ஆவியைப் பெற விரும்புகிறேன். அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று நான் அறிய விரும்புகிறேன். என் குடும்பம் இரட்சிக்கப்பட வேண்டுமென்று நான் பாரப்பட்டிருக்கிறேன்.***

*334.* ***சகோ. பிரான்ஹாமே, நீர் எக்காளங்களைக் குறித்து பிரசங்கிக்கப் போகாததனால், எங்கள் மகனைக் குறித்தென்ன? அவனையும் ஏழு எக்காளங்களையும் இணைத்து எனக்கு நீர். தொலைபேசியில் அளித்த வாக்குத்தத்தம் ஞாபகமுள்ளதா?***

*335.* ***விவாகமும் விவாகரத்தும் என்பதை தயவுகூர்ந்து விளக்கவும் (அதை நான் ஏற்கனவே விளக்கி விட்டேன். ஒரு தாளில் ஏழு கேள்விகள் - எட்டு கேள்விகள் உள்ளன). விவாகமம் விவாகரத்தும் என்பதை தயவுகூர்ந்து விளக்கவும். நான் விளக்கி விட்டேன்.***

*336.* ***இப்பொழுது மோசேயும் எலியாவும் பூமியில் இருக்கின்றனரா? அவர்கள் அமெரிக்காவில் உள்ளனரா?***

*337.* ***"இயேசு" என்னும் நாமத்திற்கும் "இயேசுவின் நாமம்" என்பதற்கும் என்ன வித்தியாசம் என்பதை விளக்கவும்.***

*338.* ***வெவ்வேறு யுகங்களில் கர்த்தருடைய நாமம் மாறிப் போனதா?***

***339. முத்திரைகள் திறக்கப்பட்ட போது காலம் முடிவுறுகிறது என்றால், அப்பொழுது... முத்திரைகள் திறக்கப்பட்ட போது காலம் முடிவுற்றது என்றால் (என்னை மன்னிக்கவும்), அப்பொழுது ஆயிரம் வருட அரசாட்சி காலமும் முடிந்திருக்க வேண்டுமே, இல்லையா?***

***340. ஆயிரம் வருட அரசாட்சி என்பது ஆயிரம் வருடங்களாக இருக்குமா? அது ஒரு சந்ததியின் காலமாக இருக்கக் கூடாதா?***

***341. கர்த்தருடைய நாமம் உண்மையில் சாலொமோன்தானா என்று சோதித்து தனக்குத் தானே அறிந்து கொள்வதற்காகத் தானே சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனிடம் வந்தாள்?***

***342. நாங்கள் இருபத்தொன்று ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் பதிவு செய்யும் நீதிபதியால் விவாகம் செய்து வைக்கப்பட்டோம். அது தவறா?***

***343. அவர்கள் அதைக் கத்தரிக்கும் போது.. முன் பாகத்தில் தலை மயிரைக் கத்தரித்தால், அது நீண்ட தலைமயிராகக் கருதப்படுமா? (இப்பொழுது, ஒரு நிமிடம் பொறுங்கள், இதை நான் புரிந்து கொள்ளட்டும்) அவர்கள்... அது நீண்ட தலைமயிராக***

***344. என் கணவருக்கும் எனக்கும் வேதத்தின் பேரில் கருத்து ஒருமைப்பாடு இல்லை - உதாரணமாக நீங்கள் பிரசங்கிக்கும் இந்த சத்தியத்தின் பேரில் அவருக்குப் புரியவில்லை. நான் விசுவாசிக்காத போதகங்களைக் கொண்டிருக்கும் சபைகளுக்கு நான் அவருடன் செல்ல வேண்டுமா? இதைக் குறித்து நான் அதிகம் கலக்கமடைந்துள்ளேன்.***

***345. சகரியா 4ம் அதிகாரமும், வெளிப்படுத்தல் 11:3-12 வசனங்களும் குறிப்பிடுவது ஒரே நபரையா? சகரியா 4:12-14 வசனங்களையும் வெளிப்படுத்தல் 11:4 ஐயும் பார்க்கவும்.***

***அவர்கள்தங்கள் பெயரைக் கையொப்பமிட்டுள்ளனர். இங்குள்ள இந்த சபையைச் சேர்ந்த சகோதரனும் சகோதரியும்.***

*346.* ***சகோ.பிரான்ஹாமே, இது தவறா..*** *(சகோ.பிரான்ஹாம் மேடையின் மேலுள்ள ஒருவருடன் உரையாடுகிறார் - 'ஆசி).* ***ஞாயிற்றுக் கிழமையில் வேலை செய்வது தவறா?***

*347.* ***சகோ.பிரான்ஹாமே, நீங்கள் ஏன் வேதத்தில் சொல்லப்படவில்லை என்று ஒருவர் அறிய விரும்புகிறார். நீங்கள்ஆபகூக்2:1-4 என்று நான் விசுவாசிக்கிறேன். (அதை எடுங்கள், சகோ .நெவில், ஆபகூக் 2:1-4). அவர்கள் இதையும் 3ம் அதிகாரத்தையும் படிக்கட்டும்... நான்கு அதிகாரங்களில் உள்ள பெயர்களும் முன்னடையாளங்களும், நீங்கள்தான் என்று நம்புகிறேன்.***

*348.* ***சகோ.பிரான்ஹாமே, கிருபை முடிந்து விட்டதென்றும் இனிமேல் வேறு யாரும் இரட்சிக்கப்பட முடியாதென்றும் சிலர் கூறுகின்றனர் (இது என் கையில் கிடைத்ததைக் குறித்து எனக்கு மகிழ்ச்சி). நாங்கள் ஜெப வரிசைகளை கவனித்துக் கொண்டு வருகிறோம், சிலர் இன்னும் கிருபையைப் பெறுகின்றனர் என்பது போல் தோன்றுகிறது.இப்பொழுது, இது முதல் கேள்வி, இரண்டு கேள்விகள் உள்ளன.***

*349.* ***இப்பொழுது, சகோ.பிரான்ஹாமே, உம்மைத் தவிர வேறு யாரும் பிரசங்கம் பண்ணக் கூடாதென்பது உண்மையா? நீர் மனிதரை அபிஷேகித்து போதகர்களாக நியமிப்பதை நாங்கள் கண்டிருக்கிறோம். அவர்கள் பிரசங்கம் பண்ணக் கூடாதென்றால் நீர் அவ்விதம் செய்திருக்க மாட்டீர் என்பது எங்கள் கருத்து.***

*350.* ***ஒரு கிறிஸ்தவன் தேவனுடைய அன்பில் ஆழமாகச் செல்லக் கூடிய வழி' எது?***

***351. சகோ.பிரான்ஹாமே, 1 கொரிந்தர் 11ம் அதிகாரம், 4 முதல் 6 வசனங்களை தயவு கூர்ந்து விளக்கவும். அது தலைமயிரைத்தவிர வேறு ஒரு முக்காட்டைக் குறிக்கவில்லையா? அல்லது, நமக்குத் தேவையான ஒரே முக்காடு நீண்ட தலைமயிர் மட்டுமா?*** *(1 கொரிந்தியர் 11ம் அதிகாரத்தை எனக்கு எடுத்துத் தாருங்கள், நாம் பார்ப்போம். 1 கொரிந்தியர் 11:4).* ***அது உரைக்கிறது நாம் ஜெபிக்கும் போது...*** *(ஓ, ஆம் அவர்கள் அதை இங்கு கூறியுள்ளனர். அவர்கள் கூறுகின்றனர்).* ***ஜெபிக்கும்போது அல்லது தீர்க்கதரிசனம் உரைக்கும்போது, நமது தலைமயிரை நாம் எடுத்துவிடலாமா...***

***353. நாம் பார்ப்போம். உங்களுக்கு போக ஒரு சபை இல்லாவிட்டால், நீங்கள் ஒலிநாடாக்கள் மட்டும் கேட்கலாமா?***

***354. உங்கள் பிள்ளைகள் பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு அவர்களுக்கு ஒரு அனுபவம் தேவையா? அவர்கள் கடைசி கால செய்தியைப் புரிந்து கொண்டால், அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுள்ளனரா?***

***355. அன்பார்ந்தவரே*** *(நாம் பார்ப்போம்),* ***எபேசியர் 4ம் அதிகாரம் 11 முதல் 13 வசனங்களில் உரைக்கப்பட்டுள்ளபடி*** *(நாம் பார்ப்போம்)* ***- ஒலிநாடாக்களின் மூலமாக நாம் பரிசுத்தவான்களின் சீர்பொருந்துதல் அனைத்தையும் பெற்றுக் கொள்கிறோமா, அல்லது நாங்கள் சீர்பொருந்துவதற்கு எங்களுக்கு உதவ, நாங்கள் ஆவியின் வரங்களும் சபையின் வெவ்வேறு உத்தியோகங்களும் இயங்கிக் கொண்டிருக்கின்ற இந்த இடத்துக்கு வர வேண்டுமா, எங்கள் இருதயங்கள் கர்த்தருடைய வார்த்தை அனைத்தும் விசுவாசித்து விட்டன.***

***356. சகோ.பிரான்ஹாமே, சகோ. ஆர்கன்பிரைட் எடுத்த படத்தை தயவாய் விளக்குவீர்களா? முதல் கேள்வி. சுவற்றில்***

***தொங்கிக் கொண்டிருக்கிற இரண்டாம் படம், உங்களைச் சுற்றியுள்ள ஒளி, வார்ப்பூட்டு (buckle) போன்றவை.***

***357. சபை எப்பொழுது - உபத்திர காலத்தில் மரித்த சபை எப்பொழுது உயிரோடெழுந்திருக்கும்? அவர்களும் தேவ பக்தியில்லாதவர்கள் உயிரோடெழும் வரைக்கும் காத்திருக்க வேண்டுமா? அவர்கள் ஆயிரம் வருட அரசாட்சியின் போது மறுபடியும் உயிரோடிருப்பார்களா?***

***358. கிறிஸ்துவுக்குள் சுதந்தரம் என்று பவுல் கூறுவதன் அர்த்தம் என்ன? நியாயப்பிரமாணத் திலிருந்து விடுதலையாக்கப்படுதல் எப்படி?***

***359. குடும்பக் கட்டுப்பாட்டைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?***

***360. சாத்தான் ஏன் வெளி. 20:3ன்படியும் 20:7ன்படியும் அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது தன் காவலிலிருந்து கொஞ்சக் காலம் விடுதலையாக வேண்டும்?***

***361: சகோ.பிரான்ஹாமே, அப்போஸ்தலர் 9ம் அதிகாரம் 7ம் வசனத்தையும், அப்போஸ்தலர் 20ம் அதிகாரம் - 22ம் அதிகாரம் 9ம் வசனத்தையும் தயவு கூர்ந்து விளக்குங்கள்*** *(சகோ.நெவில், அதை எனக்காக எடுப்பீர்களா?).* ***அப்போஸ்தலர் 9ம் அதிகாரம் 7ம் வசனத்தை விளக்குங்கள்.***

***362. மணவாட்டி மறுரூபப்படுதலின் இரகசியத்தை தயவு கூர்ந்து விளக்கவும்.***

***363. அது எப்படி எங்கே நடக்கும்? மணவாட்டி எந்த இடத்துக்குச் செல்கிறாள்?***

***364. எனக்கு இரண்டு குமாரத்திகள் உண்டு, அவர்கள் ஸ்தாபனங்களிலுள்ள மனிதர்களை விவாகம் செய்துள்ளனர். ஆனால் அவர்கள் இந்த செய்தியை விசுவாசித்து, இதற்கென்று உறுதியாக நிற்கின்றனர். அவர்களுக்கு எதிர்ப்பு உள்ளது. அவர்கள் என்ன செய்ய வேண்டும்?***

*365. சகோ.பிரான்ஹாமே, தயவு கூர்ந்து மாற்கு 13:27ஐ விளக்குவீர்களா? மேலும் சகோ.பிரான்ஹாமே, வெளி20:7-9ல் கூறப்பட்டுள்ள பரிசுத்தவான்களோடு யுத்தம் பண்ணும் ஜனங்கள் யார்? அவர்கள் எங்கிருந்து வருகின்றனர்? நோவாவின் குடும்பத்தைப் போல அவர்களும் உபத்திரவக் காலத்தில் உயிர் தப்பினவர்களா?*

*367. உங்களை ஒரு கேள்விகேட்க விரும்புகிறேன். முதலாம் கேள்வி: பெண்கள் அணியும் பைஜாமாக்கள்... (இப்பொழுது ஒரு நிமிடம் பொறுங்கள், இதை நான் படிக்கட்டும் (சகோ.பிரான்ஹாம் கேள்வியை தனக்குள் படிக்கிறார் - ஆசி] இல்லை, இது சரியா யிருக்கும்). பெண்கள் அணியும் பைஜாமாக்கள் ஆண்களின் உடை யாகுமா?*

*368. ஸ்திரியின் தலைமயிரின் முனையை கத்தரிப்பது தவறா?*

*369. சகோ.பிரான்ஹாமே, ஏழு சபை காலங்கள் ஒலி நாடாக்கள் ஒன்றில் நீங்கள், யூதாஸ் நீதிமானாக்கப்பட்டு பரிசுத்த மாக்கப்பட்டான் என்று கூறியிருக்கிறீர்கள். அவை உண்மையான (இது ஒரு நல்ல கேள்வி - அவன் பெற்றுக் கொண்ட கிருபையின் உண்மையான அனுபவங்களா இவை? நீங்கள் மேலும், யூதாஸின் பெயர் ஜீவபுஸ்தகத்தில் இருந்ததாக கூறியிருக்கிறீர்கள். இருப்பினும், அவன் பாதாளத்துக்குச் சென்று இழக்கப் பட்டான் என்று நாமறிவோம். ஒரு நபரின் பெயர் ஜீவபுஸ்தகத்தில் இருக்கும்போது, அவன் எப்படி இழக்கப்பட முடியும்? ஒருவன்முடிவில் இழக்கப்படுவான் என்று தேவன் அறிந்த பிறகும், அவனுடைய பெயரை ஏன் அவர் ஜீவபுஸ்தகத்தில் எழுதி வைக்க வேண்டும்?*

*370. சகோ.பிரான்ஹாமே, நீர் எழுபது சபை வாரங்களின் பேரில் செய்தி அளித்த போது- (என்னை மன்னிக்கவும்) தானியேலின் எழுபது வாரங்களின் பேரில், முழு கடைசி*

**வாரம் அல்லது கடைசி ஏழு வருஷங்கள் மணவாட்டி எடுத்துக் கொள்ளப்படுதலில் எடுக்கப்படும் போது தொடங்குகிறது என்று நீர் கூறினீரென்று நினைக்கிறேன்.**

*371.* **அப்பொழுது முதற்கொண்டு, முதல் மூன்றரை ஆண்டுகள் இயேசுவின் ஊழியத்தின் போது நிறைவேறினது போல் தோன்றுகிறது (நல்லது, இங்கு அதை நீங்கள் சரியாக கூறியிருக் கிறீர்கள்) ஆனால் "வாரத்தின் நடுவில்" என்று கூறப்படுவது அந்தி கிறிஸ்து தான் செய்த உடன்படிக்கையை முறிப்பதை குறிப்பிடுவது போல் தோன்றுகிறது...** *(இல்லை, அந்திகிறிஸ்து கடைசி மூன்றரை ஆண்டுகள் முடிவில் தான் தன் உடன்படிக்கையை முறிக்கிறான். பாருங்கள்?).* **தானியேலின் செய்தி ஒலிநாடாவை நான் எவ்விதம் புரிந்து கொண்டேன் என்றால், இயேசு எருசலேமுக்குள் கி.பி. *20*ம் ஆண்டில் சவாரி செய்து சென்ற போது, முதல் அறுபத்தொன்பது வாரங்கள் முடிந்து விட்டது, எனவே அவருடைய ஊழியத்தின் அந்த மூன்றரை ஆண்டுகள் அறுபத்தொன்பது வாரங்களில் சேர்க்கப்படும்: கடைசி முழு வாரம் அல்லது ஏழு ஆண்டுகள் இனிமேல் நிறைவேற வேண்டும், அது எடுத்துக் கொகர்ளப்படுதலின் போது தொடங்கும். இதை தயவுகூர்ந்து எனக்கு தெளிவாக்கும்.**

*372.* **தயவு கூர்ந்து *1* கொரிந்தியர் *7*ம் அதிகாரம் *1* முதல் *9* வசனங்களை விளக்குவீர்களா?** *(சகோ.நெவில், அதை எடுங்கள், 1 கொரிந்தியர், 7ம் அதிகாரம் முதல் வசனம்).*

*373.* **ஒவ்வொரு உண்மையான விசுவாசியும் யோவான் *14:12*ல் இயேசு கூறியுள்ள அந்த கிரியைகளை செய்வானா?** *(அல்ல!)* **பிணியாளிகளை சொஸ்தப்படுத்தி, பிசாசுகளைத் துரத்தி, மரித்தோரை உயிரோடெழுப்புவானா?** *(அது யோவான் 14ல் அல்ல என்று நினைக்கிறேன், அதனால் பரவாயில்லை. அது மாற்கு 16).* **அல்லது, இதை செய்வது எலியா மட்டும்தானா? ஒரு உண்மையான விசுவாசி இவையனைத்தையும் செய்ய வேண்டுமா? அவன்**

***உண்மையான விசுவாசியாயிருந்தால், மரித்தோரை உயிரோடெழுப்பி மகத்தான அற்புதங்களை செய்வானா?***

***374. சபையானது எடுத்துக் கொள்ளப்படுதலில் செல்லாமல் போனாலும், அவள் சுத்திகரிப்புக்காக உபத்திரவகாலத்தின் வழியாக சென்று இரட்சிக் கப்படுவாள் என்று நீர் போதித்தரென்று எண்ணுகிறேன். அப்படியானால் மரித்தோரைக் குறித்தென்ன? அவர்கள் எவ்விதம் சுத்திகரிக் கப்படுவார்கள்?***

***375. மணவாட்டி இங்கிருந்து புறப்படுவதற்கு முன்பு பரிசுத்த ஆவியின் அசைவு இருந்து, அவளால் அற்புதங்களும் அடை யாளங்களும் செய்யப்படுமா? அல்லது அவருடைய பிரத்தி யட்சமாகுதலுக்காக மட்டும் நாம் காத்திருக்கிறோமா?***

✻✻✻

# *64-08-30E COD #23*

***376. மணவாட்டி, அதாவது இந்த செய்தியை விசுவா சிப்பவர்கள், முடிவில் மேற்கில் சென்று அங்கு ஒன்று கூட வேண்டுமா?***

***377. மேலும் (ஒரு நிமிடம், இது... ஒரு வினாடி. ஓ! இல்லை, அதுவல்ல. அது... நான் நினைத்தேன். அது வெளிப்படுத்தல் அதிகாரம், அது “சங்கை காப்ஸ்” என்பது போல் காணப்பட்டது, அதைக் குறித்து எனக்கு சிறிது குழப்பம் ஏற்பட்டது. அது... நீங் கள் காண்பீர்களானால், அது அப்படித்தான் காணப்படுகிறது. பாருங்கள்? அது "சங்கை காப்ஸ்" அதன் பிறகு தொடர்ந்து... இல்லை, அது சரி).***

*வெளிப்படுத்தல் 12ம் அதிகாரம் மண வாட்டியைக் குறிக்கிறதா?*

*378. ரோமர் 7:14-18 "மேலும் நமக்குத் தெரிந்திருக்கிறபடி நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது, நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு, மாம்சத்துக்குரியவனாயிருக் கிறேன். எப்படியெனில், நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை; நான் விரும்புகிறதைச் செய்யாமல் நான் வெறுக்கிறதையே செய்கிறேன். இப்படி நான் விரும்பாததைச் செய்கிறவனாயிருக்க, நியாயப் பிரமாணம் நல்லதென்று ஒத்துக்கொள்ளுகிறேனே. ஆதலால் நான் அல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. இது எனக்குப் புரியவில்லை.*

*379. தேவனுடைய குமாரன் ஒவ்வொருவனும் அதிகமாக அபிஷேகம் பெற்று அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்ய முடியுமா, அல்லது இது பரிசுத்த ஆவியின் நடத்துதலின் படி மட்டுமா?*

*380. சகோ. பிரான்ஹாமே, பரலோக நகரத்துக்கு வெளிப்புறத்திலுள்ள பூமியில் தங்கியிருப்பவர் யார்?*

*381. ஒரு நபருடன் பிறப்பு முதல் இறப்பு வரைக்கும் தங்கியிருக்கும் அவருடைய தூதனைக் குறித்து விளக்கவும். மிகவும் நல்ல கேள்வி.*

*382. அன்புள்ள சகோதரனே, வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் இயேசுவை வணங்கும்படிக்கு அவருடைய பாதத்தில் எழுந்த போது, வணக்கத்தை வழக்கமாக அனுமதிப்பவர் ஏன் யோவானின் வணக்கத்தை ஏற்றுக்கொள்ள வில்லை?*

*383. அன்புள்ள சகோ. பிரான்ஹாமே, இயேசு சீஷர்களின் மேல் ஊதி, "பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று சொன்னதற்கும், மேலறைக்குச் சென்று அங்கு பரிசுத்த ஆவி வரக்காத் திருந்ததற்கும் வித்தியாசம் என்ன?*

***385. கர்த்தருடைய தூதனுக்கும் கர்த்தருக்கும் வித்தியாசம் ஏதாகிலும் இருக்குமானால், அது என்ன?***

***386. சகோ. பிரான்ஹாமே, நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த நாளில் ஏற்பட்டுள்ள தவறு என்னவெனில், ஒரு விசுவாசியாயிருந்து கொண்டு, செய்தியையும் இந்நாளின் செய்தியாளளையும் பின்பற்றிய போதிலும், நம்மால் நமது விருப்பத்திற்கேற்ப ஜெபம் செய்ய இயலுவதில்லை. இது ஒரு நல்ல கேள்வி.***

***387. சகோ. பிரான்ஹாமே, ஒரு நபர் தன் சொந்த சிந்தனைகளை யோசிக்கிறாரா அல்லது சாத்தான், அவர் தவறாக எண்ண வேண்டுமென்று நினைத்து அவனுடைய கருத்துக்களை சிந்தையில் போடுகிறானா - முக்கியமாக அவ்விதம் நினைக்க அவர் விரும்பாமலிருக்கும் போது - என்பதை எவ்வாறு கண்டு கொள்வது என்பதை தயவு கூர்ந்து விளக்கவும்.***

***388. ஒருக்கால், ஒரு குறிப்பிட்ட காரியத்தைக் குறித்து பிசாசு தன் எண்ணங்களை உங்கள் சிந்தையில் நுழைப்பதாக அது இருக்குமானால், அதை எவ்விதம் மேற்கொள்வது அல்லது விலக்கி விடுவது?***

***389. ஒரு நபர், தனக்கு தாழ்வான மனப்பான்மை அல்லது அவ்விதமான ஏதோ ஒரு மனப்பான்மை இருப்பதாக உணருவாரானால், அவர் இதை எப்படி மேற்கொள்வது, எனவே - அவர் ஒரே பிள்ளையாக இருந்த காரணத்தால் வாலிபத்தின் ஆரம்பத்திலே அது ஏற்பட்டிருக்கக் கூடுமா?***

***390. சகோ. பிரான்ஹாமே, பதின்மூன்று வயதுக்குட்பட்ட நமது பிள்ளைகள் எந்தவிதமான செயல்களில் பங்கெடுக்கலாம்? மேலும், அவர்கள் தங்கள். சகாக்களைத் தேர்ந்தெடுக்க நாம் எந்த வகையில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்?***

*391. சகோ. பிரான்ஹாமே, சபை காலம், லவோதிக்கேயா, முடிவடைந்து விட்டதென்று நீங்கள் அண்மையில் எப்பொழுதாகிலும் கூறினதுண்டா?*

*392. சபை காலம் முடிவடைந்து அந்தகாரம் சூழத்தொடங்கி, மணவாட்டி அழைக்கப்பட்டு விட்டிருந்தால், நாம் ஏற்கனவே உபத்திரவ காலத்தில் பிரவேசித்து விட்டோமா?*

*393. எக்காளங்களுக்கும் மணவாட்டிக்கும் சம்பந்தமில்லை என்றும் பரிசுத்த ஆவியானவர் உம்மிடம் உரைத்திருக்கிறார். ஏழு கலசங்களுக்கும் நமக்கும் ஏதாகிலும் சம்பந்தம் உண்டா ?*

*394. மல்கியா 4ல் உரைக்கப்பட்டுள்ள தீர்க்கதரிசி தான் வெளிப்படுத்தல் 7:9ல் உரைக்கப்பட்டுள்ள மீதியானவர்களையும், அவர்கள் உபத்திரவ காலத்திற்குள் செல்வதற்காக இருந்த போதிலும், அழைப்பவராக இருப்பாரா?*

*395. ஏழு இரகசியங்கள் உடைய ஏழு இடிமுழக்கங்கள் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டு விட்டதா? அவைகள் ஏழு (முத்திரைகளில் வெளிப்படுத்தப்பட்டு, நமக்கு இன்னும் அவை இடி முழக்கங்கள் என்பதாக வெளிப்படவில்லையா?*

*396. உயிரோடிருக்கின்ற மணவாட்டியின் சிறு கூட்டம், முதலாவது மணவாட்டி செய்தது போல, கர்த்தராகிய இயேசு மேகங்களின் மேல் வருவதற்கு முன்பு, எப்பொழுதாகிலும் எங்காகிலும் ஒன்று கூடி எல்லாவற்றையும் பொதுவாக அனுபவிப்பார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?*

*397. இந்த நேரத்தில் உண்மையான பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற எவராவது மணவாட்டியின் எடுத்துக் கொள்ளப்படுதலில் போகாமலிருக்க வகையுண்டா? நீங்கள் விளக்கம் தருவீர்களா? பாரத்தை*

***இலகுவாக்க நாங்கள் எந்த வகையில் உங்களுக்கு உதவி செய்யக் கூடும் என்று எங்களுக்குச் சொல்லுங்கள்.***

***398. நமக்குள்ள வார்த்தையில் நிலைத்திருக்கிற நமது ஊழியக்காரரின் மத்தியில், ஜெபிக்கவும், பிரசங்கிக்கவும், உபவாசிக்கவும், உலகில் எங்காகிலும் இருக்கக் கூடிய இழந்து போன ஆத்துமாக்களைக் குறித்து சிறிதளவும் கூட பாரமே இல்லாதது போல் தோன்றுகிறது. இந்த நிலையைக் குறித்து நாம் என்ன செய்ய வேண்டுமென்று தயவு செய்து எங்களுக்கு கூறுவீர்களா? சகோ. பிரான்ஹாமே, இதற்காக உங்களுக்கு மிக்க நன்றி.*** *இது ஒரு ஊழியக்காரனாக இருக்க வேண்டும். இந்த சொற்களுக்கு அவர் கையொப்பம் எதுவும் இடவில்லை.*

***399. சகோ. பிரான்ஹாமே, பரிசுத்த ஆவி பெற்றுள்ள ஒவ்வொருவரும் அந்நிய பாஷையில் பேசுவார்களென்று நீர் நம்புகிறீரா?*** *(இல்லை!)* ***அந்நிய பாஷையில் பேசுதல் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டதன் அத்தாட்சி அல்ல என்று நீர் கூறுகிறீரென்று எனக்குத் தெரியும். நான்... 1 கொரிந்தியர் 12:30ஐ தயவுகூர்ந்து விளக்கவும். 1 கொரிந்தியர் 12:30ஐ நீங்கள் எடுப்பீர்களா? நான் நினைக்கிறேன் "எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா?" என்னும் வசனம் அது; எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. அவர்கள் அதை எடுப்பதற்குள், வேறொரு கேள்விக்கு பதிலளிக்க முயல்கிறேன்.***

***400. சகோ. பிரான்ஹாமே, யோபு 14:21ஐ விளக்குவீரா?***

***401. கூட்டில் அடைபட்ட ஒரு கழுகு தன் சிறகுகளை அடித்துக் கொண்டு, விடுதலை பெற போராடுவதைக் குறித்த பரிதாபகரமான காட்சியை நீங்கள் விவரித்தது என் நினைவுக்கு வருகிறது. அந்த நிலையில் என் விலையேறப் பெற்ற தாயார் இருக்கிறார்கள். விவாகமான அவர்களுடைய மூன்று பிள்ளைகள், தங்கள் தகப்பனின் உபதேசத்தை***

*ஏற்றுக் கொள்ளாத காரணத்தால், மூன்று ஆண்டுகளாக அவர்கள் வீட்டிற்கு வருவதற்கு அனுமதிக்கப்படவில்லை. அவர் ஒரு ஸ்தாபன பிரசங்கியார். தாயாருக்கு இந்த கடைசி காலச் செய்தியை கேட்க வேண்டுமென்ற பிரியம் உள்ளது, ஆனால் ஒரு கடிதத்தையும் கூட அவர்களிடம் சேர்க்க என்னால் முடியவில்லை. அவர்கள் எந்த அளவுக்கு கட்டுப்பட்டிருக்கலாம்? ஜெபிப்பதைத் தவிர வேறெதாகிலும் என்னால் செய்யக்கூடுமா?*

*402. சகோ. பிரான்ஹாமே, ஒரு நபர் உண்மையான நீதிமானாக்கப்படுதல் மற்றும் பரிசுத்தமாக்கப்படுதல் அனுபவத்தைப் பெற்றிருந்த போதிலும், அவர் வார்த்தையின் வெளிச்சத்தைப் புறக்கணிப் பாரானால், அவர் இழக்கப்பட்டு நரகத்தில் முடிவடைவது சாத்தியமா?*

*403. நாம் வார்த்தையை விசுவாசிக்காமல் போனால் கிறிஸ்துவிலிருந்து நித்திய காலமாக பிரிக்கப்படுவோம் என்னும் சொற்களை நீர் உபயோகிக்கும் போது, புத்தியில்லாத கன்னிகைகள் நித்திய காலமாக வாழ்ந்து, ஆனால் கிறிஸ்து தன் மணவாட்டியுடன் வாசம் செய்யும் புதிய எருசலேமிலிருந்து பிரிக்கப்படுவார்கள் என்னும் அர்த்தத்தில் கூறுகிறீரா? இங்கு பரிசுத்த ஆவியைப் பெற்றிராதவர் உள்ளனர், அவர்கள் எவ்விதம் மறுபடியும் பிறக்க வேண்டுமென்று வேதம் உரைத்துள்ளபடியே மறுபடியும் பிறந்துள்ளனர். இயற்கை பிறப்புக்கு தண்ணீர், இரத்தம், ஆவி அவசியமானால், ஆவிக்குரிய பிறப்புக்கும் கிருபையின் மூன்று கட்டங்கள், ஒரு நபர் உண்மையாக மறுபடியும் பிறப்பதற்கு, அவசியமல்லவா?*

*404. ஆயிரம் வருட அரசாட்சி தொடங்கும்போது, அவிசுவாசிகள் எவ்விதம் பூமியிலிருந்து அகற்றப்படுவார்கள்?*

***405. சகோ. பிரான்ஹாமே, யாராகிலும் ஒருவர், அந்த பழமொழி கூறுவது போல், "என் கால் விரல்களை மிதித்தால்," எனக்கு கோபம் அதிகரிக்கிறது; இதை நான் எவ்விதம் மேற்கொள்வது? கர்த்தர் தான் இதை செய்ய வேண்டுமென்று நான் அறிந்திருக்கிறேன், ஆனால் என் இருதயத்தில் நான் என்ன செய்ய வேண்டும்? இது எனக்கு வேண்டாம்.***

***406. ஆயிரம் வருட அரசாட்சியின் போது புத்தியில்லாத கன்னிகைகள் எங்கிருப்பார்கள்?***

***407. மோசே இஸ்ரவேல் புத்திரரை நடத்திக் கொண்டு போன போது இருந்தது போல், இப்பொழுதும் மணவாட்டி, ஒன்று கூடி வாழ ஒரு இடம் இருக்கிறதா, அல்லது இனிமேல் இருக்குமா?***

***408. ஸ்திரீகளின் உடையைக் குறித்து நாம் இவ்வளவு பெரிய பிரச்சினையை உண்டாக்குவதற்கு காரணமென்ன?*** *(ஓ, ஓ, இது எனக்கு சூடு கொடுக்கிறது. இல்லையா?)* ***ஸ்திரீகளின் உடைகளைக் குறித்தும் தலைமயிரைக் கத்தரித்துக் கொள்வதைக் குறித்தும்? மனிதனின் தலைமயிரைக் குறித்தும் அவன் உடை உடுக்கும் விதத்தைக் குறித்தும் ஒன்றும் சொல்லப்படுகிறதில்லையே?***

***409. சகோ. பிரான்ஹாமே, எண்ணூறு மைல் தொலைவிலிருந்து ஒரு சகோதரி கூடாரத்துக்கு வந்திருந்தாள், நீங்கள் இயேசு கிறிஸ்துவின் அவதாரம், என்று அவள் விசுவாசிப்பதாகக் கூறினாள். தயவு செய்து இதைக் குறித்து பேசவும். அவளுடைய கருத்தை மற்றவர்களிடம் எடுத்துக் கூற அவள் அவசரப்பட்டாள்... சரி.***

***410. சகோ. பிரான்ஹாமே...*** *(மற்றவைகளை கேட்க உங்களுக்கு விருப்பமா - என்னால் முடிந்த வரையில் விரைவாக)* ***சகோ. பிரான்ஹாமே, ஒரு சமயம் தேவன் எனக்கு சாராளுக்கு அருளியது போல், ஒரு வாக்குத்தத்தை***

***அளித்தார் என்று உணர்ந்தேன். அதைக் குறித்த ஒரு கேள்வி எனக்கிருந்தது. அந்த வாக்குத்தத்தம் பிறகு வந்தது. அது தேவனிடத்திலிருந்த வந்த வாக்குத்தத்தமா? சாராள் பெற்ற வாக்குத்தத்தம் தேவனிடத்திலிருந்து வந்ததென்று அறிவேன், ஆனால் காலம் மிகவும் குறுகியுள்ளது என்று உணருகிறேன். நாங்கள் உங்கள் ஊழியத்தையும் உங்களை: ஊழியத்திற்கு அழைத்தவரையும் நேசிக்கிறோம்*** *(அது மிகவும் இனிமையானது இல்லையா?)* ***உங்கள் ஊழியத்தையும் உங்களை ஊழியத்திற்கு அழைத்தவரையும் நேசிக்கிறோம். ஆகையால் உங்களையும், நாங்கள் நேசிக்கிறோம். ஓ, அவர்கள் தங்கள் பெயரைக் கையொப்பமிட்டுள்ளனர். நன்றி, சகோதரி சகோதரனே. ஒரு கேள்வி, ஆம், ஆம், சரி.***

*411.* ***அன்பு. சகோ. பிரான்ஹாமே, பரி. மத்தேயு -22ம் அதிகாரம்.*** *(இதையும் நாம் பார்த்து விட்டோம். உங்களுக்கு ஞாபகமுள்ளதா, அன்றொரு நாள்? அதை உங்களுக்கு காண்பிக்கிறேன். நான் ... இங்கு பாருங்கள்?)...* ***வஸ்திரம் தரித்து, ஆனால் கலியாணவஸ்திரம் தரிக்காதவனாய் இந்த விருந்தாளி எவ்விதம் கலியாண விருந்துக்கள் நுழைய முடிந்தது?***

*412.* ***அப்போஸ்தலர் 2:38 மட்டுமே ஞானஸ்நானம் பெறுவதற்கு ஒரே முறையானால், திரளான ஜனங்களைக் குறித்தென்ன...? அதற்கு நான் பதில் கூறி விட்டேன்.***

*413.* ***சகோ. பிரான்ஹாமே, புகையிலை வளர்ப்பதும் அதில் வேலை செய்வதும் தவறா? இதற்கு நான் பதில் கூறவில்லை என்று நினைக்கிறேன்.***

*414.* ***சகோ. பிரான்ஹாமே, ஒரு பெண் பிரசங்கியின் கட்டுக்குள் இருக்கும் ஒரு சபைக்கு என் இரண்டு பிள்ளைகளும் செல்கின்றனர். அவள் வார்த்தையை விட்டு விலகியிருக்கிறாள் என்று எங்களுக்குத் தெரியும். அவர்கள்***

*இந்த வலுவான ஆதிக்கத்தில் சிக்கிக் கொண்டுள்ளனர். அது தவறென்று நாங்கள் எவ்விதம் அவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்?*

*415. ஆயிரம் வருட அரசாட்சி ஆயிரம் ஆண்டு காலம் இருக்குமா அல்லது அது வெறும் ஒரு காலக் கணக்கா?*

*416. சகோ. பிரான்ஹாமே, ஒரு ஸ்திரீ தன் கால்களை சவரம் பண்ணிக் கொள்வது தவறா?*

*417. எனக்கு ஒரு சிநேகிதி இருக்கிறாள், அவளை நான் அதிகமாக நேசிக்கிறேன். அவளிடம் சில ஒலிநாடாக்களும் கடிதங்களும் உள்ளன, நான் நினைக்கிறேன் அவை... அவளிடம் நான் இதைக் குறித்து பேசவில்லை. உண்மையைக் கூறினால், அவளுடைய நட்பை இழந்து விடுவேனோ என்று எனக்குபயமாயுள்ளதென்று எண்ணுகிறேன். நான் என்ன செய்ய வேண்டும்?*

*418. அன்புள்ள தேவனுடைய தீர்க்கதரிசியே, பரி. மாற்கு 16:18, நான்... வியாதியஸ்தர் மேல் கைகளை வைக்கும் ஒரு பாகமாக... நான் பாம்புகளைக் கையாளுகிறவர்களின் மத்தியில் இருக்கிறேன். அதைக் குறித்தென்ன?*

*419. சகோ. பிரான்ஹாமே, மணவாட்டியில் செல்லாத பிரசங்கிமார்கள் எதன் பேரில் பிரசங்கிப்பார்கள்? இப்பொழுது அவர்களுடைய செய்தி, பரிசுத்த ஆவி, தண்ணீர், ஞானஸ்நானம், இரட்சிப்பு என்பதாய் உள்ளது. அவர்கள் மணவாட்டியில் செல்லாவிட்டால் எதைக் குறித்து பிரசங்கிப்பார்கள்?*

*420. குடும்பக் கட்டுப்பாட்டை செயல்படுத்துவது வார்த்தையின்படி சரியா?*

*421. நீங்கள் குடும்பக் கட்டுப்பாட்டை ஆமோதிக்கிறீர்களா?*

***422. வெளிப்படுத்தல் 10ல் கூறப்பட்டுள்ள தூதனும் மல்கியா 4ல் கூறப்பட்டுள்ள எலியாவும் ஒரே நபரா?***

***423. நோவா 120 ஆண்டு காலம் பிரசங்கித்து, பேழையை 120 ஆண்டுகளாக உண்டாக்கிக் கொண்டிருந்தான் என்பதை நாம் வேதத்தில் எங்கு காணலாம்?***

***424. மல்கியா 4ல், இந்த எலியா பிதாக்களின் இருதயங்களை பிள்ளைகளிடத்திற்கும், அதன் பிறகு பிள்ளைகளின்இருதயங்களை பிதாக்களிடத்திற்கும் கொண்டு செல்ல வேண்டும். இது ஒரே நபரா?***

***425. நாம் கர்த்தருடைய சித்தத்தை எவ்விதம் அறிந்து கொள்வது? எங்கள் இருப்பிடத்தை நாங்கள் இந்தியானாவிலுள்ள ஜெபர்ஸன்வில்லுக்கு மாற்றிக் கொள்ள வேண்டுமா? ஒரு நபர் கிறிஸ்தவனாயிருந்து, கறுப்பு நிற மக்களை வெறுக்க முடியுமா? அவர் கறுப்பு நிறத்தவராயிருப்பதால், நம்மைப் போல் அவர்கள் நடத்தப்படுவதை தேவன் விரும்புவதில்லையா? இதைக் குறித்து நீங்கள் கூறும் ஆலோசனை என்ன? நீங்கள் ஒருமைப்பாட்டில் அல்லது ஒதுக்கப்படுதலில், எதில் நம்பிக்கை கொண்டிருக்கிறீர்கள்?***

***426. நாம் இப்பொழுதும் அனல் மூண்டவர்களாக சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டுமா, அல்லது அதற்கான காலம் முடிந்து விட்டதா?***

***427. சகோ. பிரான்ஹாமே, முட்டை சாப்பிடக் கூடாது, பள்ளத்தாக்கில் வசிக்காதீர்கள் என்று நீங்கள் தீர்க்கதரிசனம் உரைக்கும் போது, அந்த தீர்க்கதரிசனம் உங்களுக்கு மட்டுமா, அல்லது சபையோருக்கும் கூடவா?***

***428. சகோ. பிரான்ஹாமே, சகோதரன்*** *(ஒரு நிமிடம் இது இங்குள்ள போதகர்களில் ஒருவருடன் சம்பந்தப்பட்டது. இதை நான் முதலில் வாசிக்கட்டும் (சகோ. பிரான்ஹாம் மனதுக்குள் கேள்வியைப் படிக்கிறார் - ஆசி).* ***ஒரு நிமிடம்.***

*நல்லது. இதை எப்படியும் படிக்கப் போகிறேன்) - சகோ. பிரான்ஹாமே, சகோ.நெவில் தீர்க்கதரிசனமாக, கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், நான் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வேன் என்றுரைத்தார். நான் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வேன் என்று அவர் என்னிடம் உறுதியாக கூறின போதிலும், நான் இன்னும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளவில்லை. நான் தொடர்ந்து...*

*429. சகோ. பிரான்ஹாமே, மனைவி தன் புருஷனுக்கு கீழ்படிந்திருக்க வேண்டுமென்று வேதம் உரைக்கிறது. நான் ஒரு கிறிஸ்தவள், என் கணவர் ஒரு பாவி. அவர் தன்னாலான வரையில், எல்லா விதத்திலும் என்னை துன்புறுத்தி, நான் சபைக்கு செல்லக் கூடாதென்றும் வேதத்தைப் படிக்கக் கூடாதென்றும் கூறுகிறார். அவர் வார்த்தையை மறுதலிக்கிறார். நான் என்ன செய்ய வேண்டும்?*

*430. கடைசி வார்த்தைக்காக தேவனுடைய ஜனங்கள் எப்பொழுது எங்கே கூடுவார்கள்?*

*431. நாங்கள் அழைக்கப்படுகிறோம்... (இப்பொழுது, அன்றொரு நாள் நாம் விவரித்ததற்கான கேள்வி). நாங்கள் ஜூனியர் ஜாக்சன் சபைக்குச் செல்வதனால் அசுத்தமான பறவைகள் என்று அழைக்கப்படுகிறோம். சில நேரங்களில் நாங்கள்... அவர் இங்குள்ள இந்த சபையில் பின்பற்றப்படும் புது சபை விதிகளுடன் இணங்குவதில்லை. சில நேரங்களில் அங்கு நாங்கள் செல்வதனால், தேவனுடைய பரிபூரண சித்தத்தினின்று விலகியிருக்கிறோமா?*

❋❋❋